# "நகரைச் சுத்தமாக வைத்திருக்க ஒத்துழையுங்கள்"

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 253
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 7 ஷஃபான் 11 வியாழக்கிழமை [23-10-69]

தீபாவளி
மலிவு விற்பனை
உங்கள் வசதிக்கென
கிளை ஸ்தாபனம் ஒன்றும்
ஆரம்பித்துள்ளோம்.
உங்கள் தீபாவளித் தேவைகளைப்
பூர்த்திசெய்ய
எமது ஸ்தாபனங்களுக்கு
விஜயஞ்செய்ய மறவாதீர்கள்.
கணேசன் ஸ்ரோர்ஸ்
78 - 63, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7169

## யாழ். நகர மக்களுக்கு சுகாதார அதிகாரி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாநகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு சகல நகர மக்களையும் பூரண ஒத்துழைப்பு தரும்படி யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராசா பகிரங்க வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நகரத்தைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், தினமும் இரு தடவைகள், பிரதான வீதிகள், ஒழுங்கைகள் சுத்தம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நகர மக்களுக்கு அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்த நகரத்தை இன்னும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டுள்ளன. நகரைத் துப்புரவு செய்யும் வேலைகளில் இதற்கேற்ற மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த மாதம் முதல் திகதியிலிருந்து இரு தடவை இப்படிக்கூட்டித் துப்புரவு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு தடவை சுத்தம் செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பிரதான முக்கிய வீதிகளும் ஒழுங்கைகளும் தினமும் இருதடவைகள் சுத்தம்செய்யப்பட்டு வருகின்றன. மற்ற வீதிகளும் ஒழுங்கைகளும் ஒன்றுவிட்டொரு நாள் இவ்விதம் சுத்தம் செய்யப்படுகிறது. இதனால் நகர் புதிய தோற்றத்துடன் பொலிவுறுகிறது என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள்.

நகரை இன்னும் சுத்தமாக வைத்திருப்பதற்கு நீங்களும் உங்களால் இயன்றளவு ஒத்துழைப்பைத் தருவீர்களென எதிர்பார்க்கின்றோம். இவ்விதம் உங்களது ஒத்துழைப்பின்றி நாங்கள் எமது நோக்கத்தில் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதை சொல்லித்தான் ஆகவேண்டும்.

மதிப்புக்குரிய நகரமக்களே நகரைச் சுத்தமாக வைத்திருப்பதில் நீங்கள் எமக்குப் போதிய ஒத்துழைப்புத் தருவீர்களென்றே நாம் எதிர்பார்க்கின்றோம். வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் குப்பைகளை தேங்கும்படி கொட்டி வைப்பதைத் தவிர்ப்பதன் மூலம் நீங்கள் ஒத்துழைப்பை அளிக்கலாம்.

வடிகால்களில் குப்பைகளைப் போடுவதைத் தவிர்ப்பதன் மூலமும நீங்கள் நகரைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவ முடியும்.

பின்வரும் விஷயங்களிலும் உங்கள் ஒத்துழைப்பை நாம் நாடுகின்றோம்.

வளவினுள் கட்டப்படும் கட்டிடத்துக்கான கட்டிடப் பொருட்களை தேவையில்லாமல் வீதி வழியே கால எல்லையின்றிப் போட்டுவிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

வெட்டப்பட்ட மரத் துண்டுகளையும் பழங்கிடுகுகளையும் மற்ற இதுபோன்ற வேண்டாத பெரிய பொருள்களையும் வீதியில் கண்டபடி போட்டுவிடுவதால் நகர் சுத்தம் செய்யும் லொறியின் வேலை பாதிக்கப்படுவதோடு சட்டவிரோதமான ஒரு குற்றத்தையும் செய்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் இருத்திக்கொள்ளுக்கொள்ளுங்கள் எனவே இவ்வித தேவையற்ற பொருள்களை வீதிகளில் எறியாது வீட்டின் ஒரு புறத்தில் போட்டு வைத்து சுகாதாரப் பகுதியினரிடம் தெரிவித்தால் மிகக் குறைந்த செலவுடன் இவை துப்புரவு செய்யப்படும்.

மாநகரசபை லொறிகளால் துப்புரவு செய்வதற்கென மூடப்பட்ட குப்பைத் தொட்டியில் குப்பைகளைச் சேர்த்து வீட்டின் முன்புறத்தில் வீதிக்கருகாமையில் வைக்கவேண்டுமென சட்டம் கோருகிறது. வர்த்தக ஸ்தாபனங்களும் இவ்விதம் ஒத்துழைப்புத் தந்தால் மிகவும் உதவியாக இருக்கும். இதுசம்பந்தமாக எம்முடன் தொடர்பு கொண்டு நகரைச் சுத்தமாக வைத்திருக்க உதவுங்கள்.

உங்களது நகரை சுத்தமாக வைத்திருப்பதில் நாம் ஒருபோதும் பின்நிற்கமாட்டோம் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்ளும் நாம் நூற்றுக்கு நூறு வீதமான உங்களது ஒத்துழைப்பையே எதிர்பார்க்கின்றோம்

முன்னறிவித்தலின்றி வீதிகளிலும் வடிகால்களிலும் குப்பைகளையும் ஊத்தைகளையும் கழிவுப்பொருள்களையும் போட்டு வைப்பவர்களைத் தண்டிக்க இது சம்பந்தமானச் சட்டத்தின் 2-ம் பிரிவு (12) இடமளிக்கிறது என்பதையும் இங்கு ஞாபகமூட்ட விரும்புகின்றோம்

கடவுட்தன்மைக்கு அடுத்தபடியானது சுத்தம் என்பதையும் எங்கு அழுக்கு இருக்கிறதோ அங்கு நோய் இருக்கிறது என்பதையும் உங்களுக்கு நாம் நினைவூட்டத் தேவையில்லையென நினைக்கிறேன்.

# 10 செனட்டர்கள் இன்று தெரிவு
# 5 ஸ்தானத்துக்கு 6 பேர்போட்டி

## யாழ்ப்பாணத்தில் சேரிஒழிப்புத் திட்டம்
### ஒருலட்சம் ரூபாய் அரசுநன்கொடை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் சேரி ஒழிப்பு திட்டத்தின் கீழ் 24 வீடுகள் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இவ் வீடுகள் கட்டுவதற்கென்று மத்திய அரசாச்கம் 1 லட்சத்து 17 ஆயிரம் ரூபா யாழ் மாநகரசபைக்கு நன் கொடை வழங்கியிருக்கிறது

யாழ்ப்பாணம் எம் பி திரு ஜி ஜி பொன்னம்பலம், உள்ளூராட்சிமந்திரி திரு ஆர் பிரேமதாசாவுடன் தொடர்பு கொண்டு' அதற்கான முயற்சிகளைசெய்திருக்கிறார்

இவ் வீடுகள் கட்டுவதற்கான பணத்தில் 75 சத வீதம், மத்திய அரசாங்கம் நன்கொடையாக வழங்கியிருக்கிறது மிகுதி 25 சத வீதமும் மாநகர சபையின் செலவாகும்

நரிக்குண்டில் 10 வீடுகளும், பாஷையூரில் 8 வீடுகளும், திட்டியில் 6 வீடுகளும் இத் திட்டத்தின் கீழ் கட்டப்பட விருக்கிறது இவ் வீடுகள் அந்தந்த பகுதியில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும்

## கசிப்பு வடிக்கும்போது நால்வர் கைதாகினர்

யாழ்ப்பாணம், வியா

கசிப்பு வடித்துக் கொண்டிருந்ததாக கூறப்படும் நால் வடிக்கப்பட்ட கசிப்பும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (கா நி)

★ மகாத்மாகாந்தியின் ஒரு புதிய குட்டிக் கதை

★ திதி கொடுப்பது மூடநம்பிக்கையா?

★ உளவியல் மனித மூளையின் மறைசக்தி.

★ 'பைத்தியங்கள்' (சிறுகதை) குப்பிளான் ஐ. சண்முகன் எழுதியது.

மற்றும் 'சங்கிலியம்' (தொடர் காவியம்), 'சிலுவையும் குத்துவாளும்' (ஓரங்கநாடகம்), குடும்பச்சுடர், மாணவர்மலர், கலை அரங்கம் ஆகிய அம்சங்களுடன் அரசியல் நிருபர் எழுதும் அரசியல் விமரிசனம் உலகமேடை

ஆகியவைகளும் உங்களை மகிழ்விக்க

ஈழநாடு
வாரமலர்
(25-10-69)

## கே. எம். பி. ராஜரத்தினவும் செனட்டராகிறார்

கொழும்பு, வியா

அண்மையில் காலியான 10 செனட்டர்களின் வெற்றிடங்கள் இன்று நிரப்பப்படவிருக்கின்றன. தேர்தல் இன்று நடைபெறவிருக்கின்றது,

அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் டட்லியால் சிபார்சு செய்யப்படும் ஐந்து செனட்டர்கள் நியமிக்கப்படுவார்கள், மிகுதி 5 செனட்டர் பதவிகளுக்கும் ஆறு பேர் போட்டியிடுகின்றனர்.

பிரதமரால் சிபார்சு செய்யப்பட்டு கவர்னர் ஜெனரால் நியமிக்கப்படும் 5 செனட்டர்களே தற்போதைய செனட்சபை தலைவரான திரு ஏ ரத்நாயக்கா, நீதி அமைச்சர் திரு ஏ எப் விஜேமானே. முன்னாள் வெலிமடை எம் பி திரு கே எம் பி ராஜரத்னா ஆகிய மூவரும் இடம் பெறுவார்கள், மற்றிருவரின் பெயர்களும் இன்னமும் வெளி

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் டி எச் ஜெயவிக்கிரம, டி ஜி பிரணசிங்கா, ஒஸ்கா டி லிவரா ஆகிய மூவரும் போட்டியிடுவார்கள்.

சமசமாஜக் கட்சி சார்பில் டி ஜி வில்லியமும், சிறுபான்மைத் தமிழர் சார்பில் திரு ரி இராசலிங்கமும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி சார்பில் திரு ஐ ஏ காதரும் போட்டியிடுகின்றார்கள்,

இந்த வேளையில் திரு காதரை தான் ஆதரிக்க முடியாதென ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம் பியான திருமதி சிவா ஒபயசேகரா அறிவித்துள்ளார்.

## இராசலிங்கத்துக்கு வாக்களிக்கமாட்டாராம்
### எஸ் டி. பண்டாரநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, வியாழன்

சிறுபான்மைத் தமிழர் சமூகத்தின் சார்பில் செனட்டர் பதவிக்குப் போட்டியிடும் திரு ரி. இராசலிங்கத்துக்குத் தாம் வாக்களிக்கப்போவதில்லை எனவும் இதற்குப் பதிலாக லங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகரான வில்லியத்துக்கே தான் வாக்களிக்சப்போவதாக கம் முறையில் உரிமை கிடைக்காதென்றும், சிங்களப்பகுதியிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் கலந்து போராடினாலே உரிமை கிடைக்குமென்றும் இவர் ஆட்சிமன்றத்தில் மேலும் குறிப்பிட்டார்.

தம்மைச் சந்தித்த சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளிடம் திரு. பண்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு வடிக்கும்போது நால்வர் கைதாகினர்

யாழ்ப்பாணம், வியா கசிப்பு வடித்துக் கொண்டிருந்ததாக கூறப்படும் நால்வர் நள்ளிரவு நேரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர், இந்தச் சம்பவம் நேற்று முன்தினமிரவு கோண்டாவிலில் நடைபெற்றது.

கோப்பாய் பொலிஸ் சார்ஜன்ட் ஈ. இராசமுத்தையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே நள்ளிரவு 12 மணியளவில் இதனைக் கைப்பற்றினர்.

கைதான நால்வரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட உபகரணங்களும், வடிக்கப்பட்ட கசிப்பும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.(கா நி)

---

## திருநெல்வேலியில் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வியா திருநெல்வேலி மாதர் சங்கம் நடாத்தும் கைப்பணி பொருட்காட்சி இம்மாதம் 27-ம் 28-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. யாழ் அரசாங்க அதிபரின் பாரியாரான திருமதி பிரான்சிஸ் பீட்டர்ஸ் இதனை 27-ம் திகதி ஆரம்பித்துவைப்பார். (கா நி)

---

உலகமேடை

ஆகியவைகளும் உங்களை மகிழ்விக்க

## ஈழநாடு

வாரமலர்

(25-10-69)

வாசியுங்கள்

---

...தைய செனட்சபை தலைவரான திரு ஏ ரத்நாயக்கா, நீதி அமைச்சர் திரு ஏ எப் விஜேமானே, முன்னள் வெலிமடை எம் பி திரு கே எம் பி ராஜரத்ன ஆகிய மூவரும் இடம் பெறுவார்கள், மற்றிருவரின் பெயர்களும் இன்னமும் வெளியிடப்படவில்லை.

செனட் தேர்தலில் போட்டியிடும் மிகுதி ஐவரில் சமூகத்தின் சார்பில் செனட்டர் பதவிக்குப் போட்டியிடும் திரு ரி. இராசலிங்கத்துக்குத் தாம் வாக்களிக்கப்போவதில்லை எனவும் இதற்குப் பதிலாக லங்கா சமசமாஜக்கட்சி அபேட்சகரான வில்லியத்துக்கே தான் வாக்களிக்கப்போவதாக கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று ஆட்சிமன்றத்தில் கூறினர்.

சிறுபான்மைத் தமிழர்களின் போராட்டங்களில் கலந்துகொண்ட சிறுபான்மைத் தமிழரையே தான் ஆதரிப்பதாகவும், கொழும்பில் வசிக்கும் ஒரு சிறுபான்மைத் தமிழரைச் செனட்டராக்கத் தாம் ஒருபோதும் ஆதரிக்கப்போவதில்லை எனவும் திரு. பண்டாரநாயக்கா மேலும் சொன்னர்.

சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு அரசாங்க ஆட்சியிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் கலந்து போராடினலே உரிமை கிடைக்குமென்றும் இவர் ஆட்சிமன்றத்தில் மேலும் குறிப்பிட்டார்.

தம்மைச் சந்தித்த சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதிகளிடம் திரு. பண்டாரநாயக்கா இதுபற்றித் தெரிவிக்கையில் வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சிக் கிளை திரு. இராசலிங்கத்தை செனட்டராக்க ஆதரவு வழங்குமாறு தமக்கு அறிவித்தால்தான் திரு. இராசலிங்கத்துக்கு வாக்களிப்பதாகவும் சொன்னர்.

சிறுபான்மைத் தமிழர்கள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்களென்றும், இதனல் திரு. இராசலிங்கத்தைச் செனட்டராக்கத் தான் வாக்களிக்கப்போவதாகவும் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா அறிவித்துள்ளார்.

---

...டுப்பதற்கு உதவ முடியும்.

பின்வரும் விஷயங்களிலும் உங்கள் ஒத்துழைப்பை நாம் நாடுகின்றோம்.

வளவினுள் கட்டப்படும் கட்டிடத்துக்கான கட்டிடப் பொருட்களை தேவையில்லாமல் வீது வழியே கால...

...ததபடியானது சுத்தம் என்பதையும் எங்கு அழுக்கு இருக்கிறதோ அங்கு நோய் இருக்கிறது என்பதையும் உங்களுக்கு நாம் நினைவூட்டத் தேவையில்லையென நினைக்கிறேன்.

---

# மூன்று நாட்கள் நடைபெறும் சைவமாநாடு

யாழ்ப்பாணம், வியா. கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் 6-வது சைவ மாநாடு வழக்கம்போல் இம்முறையும் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது நவம்பர் 14 15,16-ம் நாட்களில் நடைபெறும் இம் மகாநாட்டில் ஈழத்து சைவ அறிஞர் பலரது சொற்பொழிவுகளும் பலபாடசாலைகளும் பல மன்றங்களும் தயாரித்தளிக்கும் சமய நாடகங்களும் இடம்பெறும்

**போட்டிகள்**

இம்மன்றம் மகாநாட்டை முன்னிட்டு இம்முறையும் ரூபா 200பரிசாகக்கொண்ட பல போட்டிகளை ஒழுங்கு செய்துள்ளது. இப்போட்டிகளில் பங்குபற்றும் சைவ சமய அடிப்படையில் அமைந்த நாடகங்கள், 20நிமிடங்களும் நடனங்கள் 10 நிமிடங்களும் பேச்சுத் திறனாய்வுகள் சமயதீட்சை அல்லது வீபூதி என்ற தலைப்பில் கீழ் பிரிவினருக்கு (15 வயதிற் குட்பட்டவர்கள்) 5 நிமிடங்களும் திருமுறைகளின் மகிமை' அல்லது புராணங்களின் மகிமைஎன்ற தலைப்பில் மேற்பிரிவினருக்கு (20 வயதிற்குட்பட்டவர்கள்) 8 நிமிடங்களும் சிவாயநம நமசிவாய. என்ற தலைப்பில் திருவைந்தெழுத் தெழுதுதல் கீழ்ப்பிரிவு (10 வயதுக்குட்பட்டவர்கள்) மத்தியபிரிவு 15 வயதுக்குட்பட்டவர்கள்) மேற்பிரிவு 20 வயதுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும்பத்து நிமிடங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நாடகநடனப்போட்டிகளைத் தவிர ஏனைய பேச்சுத்திறனாய்வுப் போட்டிகளுக்கு 25 சதமும் திருவைந்தெழுதும் போட்டிக்கு 10 சதமும் பிரவேசக் கட்டணங்களாக விதிக்கப்பட்டுள்ளன 5 வயதுக்குட்பட்டவர்களுக்கு தோடுடையசெவியன் தேவாரத்தைப்பாடும் போட்டியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நாடகநடனப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை திரு இ. வேலாயுதர் ஆசிரியர் மலரகம் கைதடி என்ற முகவரிக்கும் ஏனையபோட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை திரு சி சரவணமுத்து ஆசிரியர் கைதடிவடக்கு கைதடி என்ற முகவரிக்கும் அனுப்ப வேண்டுமெனக்கோரப்பட்டுள்ளனர்

## அநாதை இல்லம்

இம் மகாநாட்டு முதலாம் நாள் மன்றத்துக்கென அரசாங்கத்தால் கைதடி கண்டி வீதியில் வழங்கப்பட்ட இரண்டு ஏக்கர் நிலத்தில் சைவ அநாதை இல்லம் நிறுவுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது

---

# றெக்ளமேசனில் இராணுவமுகாம்; யாழ். மாநகரசபை எதிர்க்கிறது

யாழப்பாணம், வியா. யாழ்ப்பாண மாநகரசபையின் அங்கீகாரமின்றி றெக்கிளமேசன் துறைமுகத்தில் இராணுவ முகாமுக்கு யாழ் அரசாங்க அதிபர் காணி வழங்கமுன்வந்துள்ளாராம். இதற்கு யாழ்ப்பாண மாநகரசபை வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது.

கள்ளக் குடியேற்றத்தை தடுக்க இராணுவத்தினருக்கு றெக்கிளமேசன் துறைமுகத்திற்கு முன்னல் காணித்துண்டொன்றை ஒதுக்க அரசாங்க அதிபர் உத்தேசித்துள்ளார்.

இதற்கான அனுமதியை யாழ். மாநகரசபையிடம் முதலில் கேட்டபோது கூடுதலான அங்கத்தவர்கள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்த பின்னரும் கூட இதனை செயல்படுத்த அரசாங்க அதிபர் முன்வந்துள்ளதாலேயே மாநகரசபை மீண்டும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது பற்றிய பிரேரணையை சபையில் கொண்டுவந்த மாநகர அங்கத்தவரான டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தனது பிரேரணையில் இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு வேறு இடத்தில் இதற்குப் பதிலாக காணித்துண்டு ஒதுக்கிக் கொடுக்குமாறு அரசாங்க அதிபரைக் கேட்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாண ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஜி. ஜி பொன்னம்பலமும் இது பற்றி யாழ். அரசாங்க அதிபர் திரு பிரான்சிஸ் பீட்டர்ஸிடம் தொடர்பு கொண்டுள்ளார், குருநகர், பாஷையூர், கரையூர் பகுதி மக்களும் இதற்கு பலத்த ஆட்சேபம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர்.(கா நி)

---

## சந்திரகும்ப விழா

யாழ்ப்பாணம், வியா கொழும்புத்துறையிலுள்ள மண்டுலாடும் சித்திவிநாயகர் ஆலயத்தில் நாளைமாலை சந்திரகும்ப திருவிழா நடைபெறவிருக்கிறது, இவ்விழாவை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ஆசிரியர்கள் சிறப்பாகக் கொண்டாட விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளனர்,

பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். இரவு சுவாமி வீதிஉலாவருவார்.

---


## தீபாவளி ஜவுளி மொத்த விற்பனை

தீபாவளிப் பண்டிகைக்காக

வியாபாரிகள்-பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள்

தெரிவுசெய்வதற்கென ஏராளமான ஜவுளிகள் எண்ணற்ற டிசைன்களில் வரவழைத்திருக்கிறோம்.

விசேஷ விலை கழிவுகளுடன் பெற்றுக் கொள்ளலாம்.

# செ. கா. சிப்பிள்ளை அன் கோ.

(மொத்த-சில்லறை ஜவுளி விற்பனையாளர்கள்)

82 காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

போன்: 506 தந்தி: 'பகவான்'

கிளை: சிகேபி 74/8, பெரியகடை, யாழ்ப்பாணம்.


---

# மலையக மக்களின் எதிர்காலம்

## விஷயாலோசனைக்குழு ஆராய்கிறது

(இராமானுஜம் நகர்)

அட்டன், புதன்

'அரசியல் நிலையை அலசி ஆராய்ந்து அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்பதற்கு வழிகாண்பதற்காகவே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 23-வது மகாநாட்டில் இன்று விஷயாலோசனைக் கமிட்டி கூடியிருக்கிறது' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு எஸ் தொண்டமான் கூறினர், ஆண்களும் பெண்களுமாக மலையகத்தின் பலபகுதிகளிலுமிருந்து வந்திருந்த விஷயாலோசனைக் கமிட்டி அங்கத்தவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்-

தேசிய அரசாங்கத்தை ஆதரித்து அதில் ஓர் அங்கமாக விளங்கிவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த ஐந்துவருடகாலத்திலும் மலையகத்தொழிலாள மக்களுக்குச் செய்துள்ள நன்மைகள் பற்றியும் தேசிய அரசாங்கம் இதுவரை அளித்துள்ள சலுகைகள் உரிமைகள்பற்றியும் விஷயாலோசனைக் குழு ஆராயவிருக்கிறது. இன்று கூடிய விஷயாலோசனைக் குழு நாளைப்பிற்பகலும் தொடர்ந்து கூடும்.

விழாக்கோலம் பூண்டிருக்கும் ஹட்டனில் இராமானுஜர் நகரில் மலையகத்தின் பலபகுதிகளிலிருந்தும் பாட்டாளி மக்கள் திரண்டுள்ளனர்.

இன்று காலை விஷயாலோசனைக் குழு கூடுவதற்குமுன் தலைவர் திரு தொண்டமானை டிக்கோயாக் கிளைத் தலைவர் திரு முருகன் மலர்மாலை சூட்டி வரவேற்றார்.

### அடிகளார் ஆசிச்செய்தி

இ. தொ. கா மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு குன்றக்குடி அடிகளார் வருவாரென எதிர்பார்க்கப்பட்டது ஆனல் அடிகளார் அனுப்பிய ஆசிச்செய்தி இன்று கூட்டத்தில் வாசிக்கப்பட்டதும் அடிகளார் வரமாட்டாரென்பது ஊர்ஜிதமானது. நியுஸிலாந்து மற்றும்பல நாடுகளிலிருந்தும் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆசிச்செய்திகள் அனுப்பியிருந்தனர்.

### இதுவே எமது குறிக்கோள்

இலங்கையிலுள்ள இதர இனத்தவரைப் போன்று இந்திய வம்சாவளியினர் நடாத்தப்படவேண்டுமென்பதே எமது குறிக்கோள். இதற்காகவே இ தொ கா பாடுபடுகிறது. இலங்கை அரசாங்கம் எப்படித்தான் எம்முடன் நடந்துகொண்டாலும், எமது பாரம்பரிய கலாசாரத்தைக் கைவிடமாட்டோம்.

நேற்று மாலை இராமானுஜம் நகரில் ஆரம்பமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டில் காங்கிரஸ் கொடியை ஏற்றி வைத்துப் பேசிய இ தொ கா தலைவரும், நியமன எம் பியுமான திரு எஸ் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினர்

விழாக் குழுத் தலைவர் திரு சி முருகன் மாலைசூட்டி திரு தொண்டமானையும், ஹட்டன்-டிக்கோயா நகர சபைத் தலைவர் திரு என் கனகரத்தினத்தையும் வரவேற்றுப் பேசினர்.

......

---

கிரிக்கெட்:

## ஆஸ்திரேலியா இலங்கை

கொழும்பு, புதன்

ஆவுஸ்திரேலியாக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட் தலைவர் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே இன்று கொழும்பில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஆட்டம் முடிவடைந்தபோது ஆஸ்திரேலியக் கோஷ்டி 7 விக்கெட் நஷ்டத்துக்கு 301 ஓட்டங்களைப் பெற்றிருந்தது, இலங்கை கோஷ்டி 6 விக்கெட்டுக்கு 110 ஓட்டங்களைப் பெற்றது.

---

# தமிழ் புறக்கணிப்பு பற்றி கோப்பாய் எம்.பி. ஆட்சேபம்

யாழ்ப்பாணம்,வியா. தந்திதபால் விநியோகத்தர் விண்ணப்பப் பத்திரம் தமிழிலும் வெளிவராதது குறித்து கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை தபால்மா அதிபர் திரு வேர்ணன் அபயசேகராவிற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் எம். பி தபால் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது: தந்திதபால் விநியோகத்தர் விண்ணப்பப் பத்திரத்தில் சிங்களமும் ஆங்கிலமும்மட்டுமே இடம் பெற்றிருக்கிறது தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் புறக்கணிக்கப்பட்டதற்கு காரணமென்ன? தமிழ்மொழி மட்டும் தெரிந்தவர்கள் எப்படி இதற்கு விண்ணப்பிப்பது இதுபற்றிவிசாரித்து தமிழிலும் வெளியிட ஒழுங்கு செய்யுங்கள்.

இவ் விஷயமாக ஆட்சிமன்றத்திலும் கேள்வி எழுப்பப்போவதாக கோப்பாய் எம். பி. தெரிவித்துள்ளார்.

......

## 'ரேஷன் அரிசியை அதிகரித்தால்...'

டெடிகம, புதன்

'சிலர் அரசாங்கம் முன்னர் போன்று இரண்டு படி அரிசியையும் மக்களுக்குக் கொடுக்க வேண்டுமெனக் கூறுகின்றனர். இவ்வாறு இருபடி அரிசியை மக்களுக்குக்கொடுத்தால் அதனல் என்ன விளைவு ஏற்படுமென்பதைஇவர்கள் அறியவில்லை. அரசாங்கம் இருபடி அரிசியை மக்களுக்கு இலவசமாக வழங்கினல் விவசாயிகள் விவசாயத்தில் இப்போது போன்று கூடிய அக்கறை காட்டமாட்டார்கள். இதுமட்டுமன்றி அவர்களின் நெல்லையும் அரசாங்கம் மிகவும் குறைந்த விலைக்கே கொள்வனவு செய்யவேண்டி நேரிடும்.'

டெடிகம பகுதியின் புதிய பாலமொன்றைத்திறந்து வைத்துப்பேசிய பிரதமர் மேற்கண்டவாறு கூறினர்.

'அரசாங்கம் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், விவசாயத்துக்குமே பெருந்தொகையான பணத்தைச்செலவு செய்கிறதெனத்தொடர்ந்து பேசிய பிரதமர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

வீடு

சகல வசதியுடன் வீடும் கட்டிடக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 32, நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 1489

### தேவை

யாழ்ப்பாண முனிசிப்பல் எல்லைக்குள் காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரை பத்திரிகை விநியோகம் செய்யப் பையன்கள்கோரப் படுகின்றனர். பிணைப் பணம் 1000/-. மாதச்சம்பளம் 125/- கொடுக்கப் படும். 27-10-69க்கு முன் விண்ணப்பிக்கவும். நியூஸ் டிஸ்ரிபியூட்டேஸ், புஸ்ப வில்லா, ஆனைக்கோட்டை. 1495


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 23—10—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 41 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு6-15 கோட்டுவாத்தியம், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம்,8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச்சுருக்கம்.

## உதைபந்தாட்டம்

உடுவில், புதன்

வலிகாமம் வடக்கு உடுவில்பகுதி விளையாட்டுச்சங்க ஆதரவில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம் மாத இறுதியில் நடைபெற இருக்கிறது. இப் போட்டியில் உடுவில் இணுவில், சுன்னுகம் மல்லாகம் அளவெட்டி குப்பிளான் புன்னாலைக்கட்டுவன் ஆகிய கிராமசேவையாளர் பிரிவிலுள்ள கோஷ்டிகள் பங்குபற்றவுள்ளன.

காங்கேசன்துறை ஈஸ்வரி வைத்தியசாலை டாக்டர் திரு இராஜேந்திரன் இப்போட்டிக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்கியுள்ளார், இப் போட்டிகளில் வெற்றி பெறும் தெரிவுக் கோஷ்டி 1969—70ல் நடைபெறும் காரியாதிகாரி பிரிவுகளுக்கான போட்டிகளில் பங்குபற்றும்.

காலத்துக்குகாலம் அகில இலங்கை உதைபந்தாட்டப் பயிற்சியாளர்களைக் கொண்டு இக் கோஷ்டிக்கு பயிற்சியளிக்கவும் போட்டிகள் அகில இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் விதிகளுக்கு அமையவும் நடத்துவதெனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

## திறப்புவிழா

சுழிபுரம், புதன்

மாதகல் 5-ம் வட்டாரத்தில் கலைமகள் சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழா நேற்றுமுன் தினம் சமயமுறைப்படி திறந்துவைக்கப்பட்டது. நிலையத்தலைவர் திரு. க. வீரவாகு தலைமையில் வைபவம் நடைபெற்றது.


இனும்! இனும்!! இனும்!!!

50/ ரூபாவிற்கும் அதற்கு மேலும் ஜவுளி வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் எதிர்பாராத இலவச பரிசுகள் கொடுக்கப்படும்.

டயருாம்ஸ்,

54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.


## கொழும்புத்துறை கலாசாலையில் சித்தியடைந்தோர் விபரம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பயின்று கடந்த ஆண்டு இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விபரம் வருமாறு:

சு அடைக்கலம், பொ ஆறுமுகம், க செல்லையா, அ கிறிஸ்தேப்பர், சு இமானுவல், ம யேசுரத்திரம், ம கந்சாமி, பொ கணேசலிங்கம், சி கிருட்டினன், சி குமாரசாமி, சு மகேந்திரராசா, செ மரியாம்பிள்ளை லெஸ்லி, வி மரியான்டாபிறசா, சு மரியதாசன்குருஸ், மு நமசிவாயம், ந பரமானந்தம், வி பாலேந்திரன், அ பொன்னம்பலம், வி இராமச்சந்திரன், சோ சபாரத்தினம், பொ சற்குணநாதன், ப சவரிமுத்து செல்லத்துரை, சு செபஸ்தியன் குருஸ், க சீனிவாசகம், இ செல்லத்துரை' க செல்வரத்தினம், வெ சண்முகம், அ சண்முகரத்தினம், க சின்னத்துரை, ச சிதம்பரப்பிள்ளை, பொ சிவஞானம், செ சிவானந்தராசா, சி சிவராசா, செ சீவரத்தினம், த சிவசுப்பிரமணியம், க சொக்கலிங்கம், சி துரைராசா, சு வேலுப்பிள்ளை, க கிருஷ்ணன், அ இராமநாதன்' நி துரைராசா, க சிவசோதி, கி ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் நூலசித்தி பெற்றனர். (சுழி. நி)

## வெற்றிதோல்வி இல்லை

உடுவில், புதன்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் சினேகபூர்வமானமுறையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி சமமாக முடிவடைந்தது.

இரண்டுகல்லூரிக் கோஷ்டிகளும் தலா 2—2 கோல்களை பெற்றன. ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

## இருபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

நவராத்திரி விழாவை முன்னிட்டு அரியாலை சரசுவதி மத்திய நூல்நிலையத்தினரால்நடாத்தப்பட்ட புதினப் பத்திரிகை வாசிக்கும் பழக்கப்போட்டியிலும்சிறுகதைப் போட்டியிலும் பரிசுபெற்றவர்கள் விபரம் வருமாறு:

புதினப் பத்திரிகை வாசிக்கும் பழக்கப்போட்டி: இ ஸ்ரீதரன், வை கணேசநாதன், சி. உமாகாந்தன்,

## கந்தபுராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வியா.

சுன்னுகம் பட்டினசபை நூல் நிலைய ஆதரவில் இயங்கும் ஆய்வுக்குழுகூட்டத்தில் வரும் 25-ந் திகதி மாலை 6-30க்கு தற்காலிக ஒடிட்டர் ஜெனரல் திரு. ஆ. குணநாயகம் "கந்தபுராண பாராயணத்தால் நான் பெற்ற அனுபவம்" எனும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

சைவப்புலவர் மணித குமாரசாமிப்பிள்ளை தலைமை தாங்குவார்.

......

## பிரியாவிடை

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் ஐக்கியகலாசாலையில் கடமையாற்றிய திரு. தம்பிநாயகம் உயர் கல்விக்காக பேராதனை பல்கலைக் கழகத்திற்குச் செல்வதை முன்னிட்டு அவருக்கு கலாசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பிரியாவிடை அளித்தனர் இவ்வைபவத்திற்கு கலாசாலை உப-அதிபர் செல்வி. க வல்லிபுரம் தலைமை வகித்தார். உப-அதிபரும் ஆசிரியர்களான செல்வி பு. தம்பித்துரை, செல்வி. தம்பிப்பிள்ளை ஆகியோரும் மாணவர்களான திரு. ரமணஸ்கந்தன், திரு. சரவணபவன், ஆகியோரும் அன்னாரின் சேவைகளைப்பாராட்டிப் பேசினர்கள். திரு. மகேந்திரன் நன்றியுரை வழங்கினர்.

பூநகரி

## பஸ் சேவை முற்றாக ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், வியா.

பூநகரி-சங்குப்பிட்டி, மன்னர், கிளிநொச்சி, பஸ் சேவை நேற்று முன் தினம் முழுவதும் முற்றாக ஸ்தம்பிதிருப்பதால் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டங்களுக்குள்ளானர்கள்.

இப்பகுதி சேவையில் ஈடுபடும் பஸ்கள்யாவும் பழுதடைந்தமையினலேயே சேவை ஸ்தம்பித்தாக கூறப்பட்டது இது பற்றி பூநகரி சக்தி கிராம முன்னேற்றச்சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, பஸ்களை சேவையில் அமர்த்தும்படி கேட்டிருந்தது. (ந. நி.)

## அரிசிக்கப்பல்

## 'தனி பஸ் சேவை நடத்துக' உள்ளூராட்சி அமைச்சருக்கு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் கொடிகாமம் பாதைகளில் பழுதடைந்த இரட்டைத்தட்டு பஸ்களுக்கு பதிலாக ஒற்றைத் தட்டு பஸ்களை விரைவில் சேவைக்கு விடும்படி இ. போ. ச. வடபிரதேச முகாமையாளரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் தென்யாழ்ப்பாணம் பிரயாணிகள் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்தில் நடந்த இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன: யாழ்ப்பாணம் கொடிகாமம் பஸ் சேவையையும், பாடசாலை சேவையையும்ஒழுங்காகநேர அட்டவணைப்படி சேவையிலீடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்கும்சாவகச்சேரிக்குமிடையில், பஸ் கம்பனி காலத்தில் இருந்தது போல தனியான சேவை ஆரம்பிக்கவேண்டும்.

கீழ்க்காணுவோர் புது வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர். சி. எம். சண்முகநாதன், உபதலைவர்: ஸ்ரீபாலசந்திரஐயர், செயலாளர். ஏ. கந்தையா, உப செயலாளர்: கா. யோகநாதன், பொருளாளர்: எஸ். குமாரசாமி நிர்வாக சபை உறுப்பினர்களாக மேலும் 8பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'சாதிக்கட்டுப்பாட்டை ஒழிக்க தொடர்ந்துபோராடவேண்டும்'

யாழ்ப்பாணம், வியாழன்

"1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி தமிழரசு, தமிழ் காங்கிரஸ் ஆதரவாளர்களுடன் ஊர்வலம் நடத்தியபோது, பொலிசார் எம்மைத் தாக்கிக் கைதுசெய்தார்கள் சாதிக்கட்டுப்பாட்டைஅழிக்கத் தொடர்ந்து போராட்டம் செய்யவேண்டும் என்பதையே இன்றைய கூட்டம் எடுத்துக்காட்டுகின்றது"

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எஸ் ரி என் நாகரத்தினம் தமது தலைமையுரையில் இவ்வாறு தெரிவித்தார்

தீண்டாமையை எதிர்த்து தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் இக்கூட்டம் நடத்தியது அன்று மாலை அச்சுவேலியிலிருந்து சுமார் நானூறுபேர் செங்கொடிகளுடனும், சுலோகங்களுடனும் ஊர்வலமாக யாழ் நகர மண்டபத்தை வந்தடைந்தனர்

எஸ் ரி என் நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திரு த வடிவு நாதன் பேசுகையில் சில பத்திரிகைகள் மக்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்த முயல்கின்றன என்றும் குறிப்பிட்டார்,

திருவாளர்கள் வாட்சன் பெர்னண்டோ, ஏ. எஸ். கனகரத்தினம், கே. டானியல், கே. செந்திவேல், வி. கதிர்காமு, சுபைர் இளங்கீரன் ஆகியோரும் பேசினர்கள். (கா. நி)

## லண்டன் பயணமானர்



யாழ்ப்பாணம், வியாழன்

நெசவுத்துறையில் பயிற்சி பெறுவதற்காக திரு. பி அம்பிகைபாகன் லண்டன் சென்றுள்ளார். இவர் அங்கு நான்கு வருட பயிற்சியை மேற்கொள்வார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவரான திரு அம்பிகைபாகன் யாழ்ப்பாணம் மாநகர சபையைச் சேர்ந்த திரு. எஸ். பொன்னுத்துரையின் மகனவார்.

## பஸ்ஸுக்குள் மழை

உடுத்திரபுரம், புதன்

இப்பகுதியில் சேவையில் ஈடுபடும் இ போ. ச. பஸ்ஸில்

## புருனே செல்கிறர்

யாழ்ப்பாணம், வியாழன்

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராயிருந்த திரு எம் குகதாசன் புருனே செல்கிறர். புருனே அப்புக்காத்து கம்பெனியில் இவர் சட்ட

## உபசபாநாயகர் பாராட்டு

புலோலி, புதன்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர் பிரேமதாஸாவினல் பருத்தித்துறை தொகுதிக்கும் உடுப்பிட்டித்தொகுதிக்கு மிடையிலுள்ள துன்னலை ஊரெல்லை வீதியில் அமைக்கப்பட்ட நவீன வார்ப்புப் பாலத்தை உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினரும், உப சபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் திறந்து வைத்தார்.

அதன்பின் நடைபெற்ற கூட்டத்திற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் கட்டைவேலி கிராமசபை நிர்வாகஸ்தருமாகிய திரு ஏ. ஏ. யோசெப் தலைமை வகித்தார்.

ஆட்சிமன்ற உறுப்பினர் தனது உரையில், தமது தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட இந்தப்பாலம் முப்பதினயிரம் ரூபாவுக்குள் கட்டி முடிக்கப்பட்டதாகவும் இந்த பாலம் கட்டுவதற்குரிய இடத்தை ஆணையாளரும் பொறியியலாளருமே தேர்ந்தெடுத்ததாகவும் இப்பாலம் மட்டுமல்லாது இன்னும் இதே பகுதிக்கு பல பாலங்கள் கட்ட இருப்பதாகவும் இப்படிப்பட்ட வார்ப்புப்பாலம் நிறுவுவதற்கு முதல் காரண கர்த்தா உள்ளூராட்சி அமைச்சர் அவர்களே என்று குறிப்பிட்டு அவர் ஆட்சிக்கு வந்ததும், அவர் முன்பு கிராமசபைகளில்அங்கத்தவராக இருந்தபடியால் கிராமங்களின் குறை நிறைகளை அறிந்திருந்தபடியால் கிராமங்களுக்கு இவ்வித பாலங்கள் அமைத்துக் கொடுப்பதும் மின் விளக்குகள் கிராமந்தோறும் நிறுவவும் முயற்சி எடுத்து வருகிறர். வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்ட நவீன வார்ப்பு பாலங்களில் இன்று துன்னலையில் அமைக்கப்பட்ட பாலம் ஏழாவது பாலமாகும். இந்த ஏழாவது பாலம் மூன்று மாதத்தில் வடபகுதியில்எவ்விடத்திலாவது இவ்வளவு கெதியில் கட்டி முடிக்கப்படவில்லை இந்தப்பாலம் விரைவில் பூர்த்தியடையசெய்தபெருமை பொறியியலாளர் திரு. புவனேந்திரத்தையே சாரும் என்று கூறினர்.

தலைமை வகித்துப்பேசிய திரு ஏ ஏ ஜோசேப் கூறியதாவது. கிராமங்கள் தோறும் உள்ளூராட்சி அமைச்சரினல்500வார்ப்புப் பாலங்கள் நிறுவப்படவிருக்கின்றன. வடபகுதியில் நாங்கள் பல இடங்களிலும் பாலம் அமைது வருகிறேம். இன்று கட்டிமுடிக்கப்பட்ட பாலம் ஏழாவது பாலமாகும். பாலங்கள் அமைத்தால் போதாது கிராம மக்களின் ஒத்துழைப்பும் இருந்தால் தான் நாங்கள் இதுபோன்ற நவீன பாலங்களை அமைக்க முடியும் என்றர் பொறியியலாளர் திரு சி புவனேஸ்வரன் உட்படப் பலர் பேசினர்.

## 'பிள்ளைகளின் முதல் ஆசிரியர் பெற்றேரே'

பண்டத்தரிப்பு, புதன்

'பெற்றேர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதுடன் மட்டும் தம் கடமை முடிந்து விட்டது என்று எண்ணுவது தவறு. அவர்கள் நல்ல முறையில் கற்கபெற்றேர்தான் தூண்டுதலாக இருக்க வேண்டும். பிள்ளைகள் கல்வியில் குறைபாடுள்ளவர்களாயிருப்பதால் ஆசிரியர்களைக் குறை கூறுவதில் பயனில்லை, பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களாய் விளங்குபவர்கள் பெற்றேர்களே. பிள்ளைகளின் கல்வியில் கூடிய அக்கறைகாட்ட வேண்டிய கடமை அவர்களுக்குத்தான் உண்டு.'

மேற்கண்டவாறு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண. பெஞ்சமின் அல்பிரட் சுவாமியார் இளவாலை சென் ஜேம்ஸ் பங்கு பெற்றேர்மத்தியில் வைபவம் ஒன்றில் கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## சாராயம் திரும்புகிறது

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்து கிழக்கு ஜேர்மனிக்கு அனுப்பப்பட்ட இரட்டைவடி சாராயம் மீண்டும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. வெளிநாட்டினர் இதை விரும்பாததாலேயே இவ்விதம் அனுப்பப்பட்ட

......

## இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் பேராதனை பல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயரூம்ஸ்,

54, 60, மெயின்வீதி — யாழ்ப்பாணம்.



## வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி4காட்சிகள்

ரவிச்சந்திரன் ஜெயலலிதா நாகேஷ்

நடித்த

# அன்று கண்ட முகம்



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — நிர்மலா சௌகார் ஜானகி நடித்த

# லக்ஷ்மி கல்யாணம்

வெற்றிமுரசு கொட்டும் 2-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

இன்று முதல்

## வெலிங்டன்

[யாழ். நகர்]

தினசரி 2-30, 6-30, 9-30, போயா, பிரிபோயா 4 காட்கள்

★ ரவிச்சந்திரன்,

★ பத்மினி,

★ நாகேஷ்,

★ குமாரிசச்சு,

★ பாலையா ★ கருணாநிதி

மற்றும் பலர் நடித்த

# எங்களுக்கும் காலம் வரும்

கதைவசனம்: பாகமணி — டைரக்ஷன்: வின்சென்ட் — பாடல்கள்: கண்ணதாசன்-வாலி


ராலநடாத்தப்பட்ட புதினப் பத்திரிகை வாசிக்கும் பழக்கப்போட்டியிலும்சிறுகதைப் போட்டியிலும் பரிசுபெற்றவர்கள் விபரம் வருமாறு:

புதினப் பத்திரிகை வாசிக்கும் பழக்கப்போட்டி: இ ஸ்ரீதரன், வை கணேசநாதன், சி. உமாகாந்தன், ந. பாஸ்கரன்.

சிறுகதைப் போட்டி: ப. யோகநாதன், சி. உமாகாந்தன், வை. கணேசநாதன்.


வல்வெட்டித்துறை

## றஞ்சனா தியேட்டர்

தினசரி 2-30 6-30, 9-30.

சுந்தரராஜன். - பத்மினி பேபிராணி

நடித்த

## குழந்தைக்காக

## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30 இரவு 9-30

பிரிபோயா, போயா 2-30மணி

எம்.ஜி ஆர். - சரோஜாதேவி

நடித்த

## பறக்கும் பாவை

(ஈஸ்மன் கலர்)

## ஸ்ரீ காலிங்கா

இணுவில்

தினசரி ,6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30 மணி

எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா

நடித்த

## அரசகட்டளை

## ராஜா

(யாழ்ப்பாணம்)

Daily 4-45, 7, 9-45 P.M.

Jayne Mansfield

Juliet Prowse

in

'SPREE'

(color)

(Strictly for Adults)

## REGAL JAFFNA

Daily 4-45,7& 9-45p m.

Poya, Prepoya 4 Shows

Jean Marias

in

THE SAINT AGAINST AGENT 00

## MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00&9-45pm

Poya Prepoya 10-30 a. m.

THE ELUSIVE AVENGERS

(Scope-color)


பூநகரி சக்தி கிராம முன்னேற்றச்சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, பஸ்களை சேவையில் அமர்த்தும்படி கேட்டிருந்தது. (ந.நி.)

## அரிசிக்கப்பல் வருகின்றது

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இவ்வருடபருவ காலத்துக் கடைசிக்கப்பல் ஒன்று நாளை வரவிருக்கிறது.

சுமார் 8,500 தொன்நிறையுடன் இங்குவரும். அரிசிக்கப்பல் வேலையை, யாழ். மாவட்ட துறைமுக தொழிலாளர்சேவைச்சமாசம்செய்யவிருக்கின்றது.

பெர்னண்டோ, ஏ. எஸ்.

## பஸ்ஸுக்குள் மழை

உருத்திரபுரம், புதன்

இப்பகுதியில் சேவையில் ஈடுபடும் இ போ.ச.பஸ்ஸில் குடை பிடித்துக்கொண்டே பிரயாணஞ் செய்ய வேண்டியிருப்பதாக பிரயாணிகள் பலர் பலத்த புகார் தெரிவிக்கின்றனர்.

பஸ்ஸில்பிரயாணஞ்செய்த பல நோயாளிகள் மழையில் நனையவேண்டியும் ஏற்பட்டதாம். நல்ல பஸ்களை சேவையில் அமர்த்தும் படி இப்பகுதி மக்கள் இ. போ. ச. பிராந்திய முகாமையாளரிடம்கேட்டுக்கொண்டுள்ளனர்.

# இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 7 ந் திகதி (23 - 10 - 69)

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

மேஷம்- சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும். சிருடன் வாழ்வீர். பெரிய இடத்து சிநேகம் அனுகூலங்களைக்கொண்டுவரும். வியாபாரத்துறையில் விருத்தியும் செல்வாக்கும் பெருகும்.

ரிஷபம்- குடும்பத்தில் சுகக்குறைவு தென்படும். வைத்தியச்செலவுகளுக்காகப் பணம் செலவாகலாம். வேண்டாத ஒருவரின் தலையீடு மனதில் வேதனையைத் தரும். மனத்திடம்வேண்டும்.

மிதுனம்- வீட்டில் நலம்தரும் சம்பவங்கள் நடைபெறும். தொழில்துறையிலும் வெற்றிவாகை சூடுவீர். சமரச எண்ணம் தலைதூக்கும். சுற்றுலில் பெரும் மதிப்பு ஏற்படும். சிறப்பான தினம்.

கடகம்- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் அமைதி தவழும்.

சிம்மம்- புனைந்துரை கேட்கநேரிடும். இதன்மூலம் பொல்லாதகோபமும் தலைதூக்கும். தொழில்துறையில் மந்தநிலை தென்படும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

கன்னி- புதிய சூழ்நிலை உங்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கும். பெரியோர் ஆதரவு கிடைக்கும். குடும்ப வாழ்க்கை இன்று கற்கண்டுபோல் இனிக்கும்.

துலாம்- கடமைப்பாதையில் புதிய தடைகள் தூக்கலாம். சொந்த வாழ்க்கையிலும் பிரிவுத்துயர் தாக்கக்கூடும். நண்பர் ஒருவர் காலை வாரிவிடக்கூடும். நிதானம்வேண்டும்.

விருச்சிகம்- கைகொடுத்து உதவுவதற்கு தந்தை முன்வருவார். காரியசித்தியும் கிட்டும். நீண்டநாள் எதிராகவிருந்த மீண்டும் நண்பர்கள் ஆவார்கள். திருப்தியான தினம்.

தனுசு- தங்கக்குணம் மேலிடும். தக்க மதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள்பெருகும். உழைப்பினல் பலனும், உற்சாகமும் பிறக்கும். முன்னேற்றமான தினம்.

மகரம்- இலக்கியரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படும்.

கும்பம்- இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைமை தென்படும். மனதில் விரக்திமனப்பான்மை தலைதூக்கும். உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும். மனஅடக்கம் நன்று.

மீனம்- மோதவரும் பகை மோசடிகள் நடக்கும். சகோதரவழியால் சஞ்சலம் ஏற்படலாம். அதிக சிந்தனைக்கு இடம்கொடுக்காது துணிவேதுணையென இருக்கவும்.

## புருணே செல்கிறார்

யாழ்ப்பாணம், வியாழன்

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் பகுதிநேர விரிவுரையாளராயிருந்த திரு எம் குகதாசன் புருணே செல்கிறார். புருணே அப்புக்காத்து கம்பெனியில் இவர் சட்ட ஆலோசகராக இம்மாதம் 28-ம் திகதி பதவியேற்கவிருக்கிறார். பலாலி கனிஷ்ட பல்கலைக் கழகத்தில் பத்திரிகைத்துறை, வர்த்தகத் துறை சம்பந்தமான சட்ட விரிவுரையாளராயிருந்த இவர் மல்லாகம்-அளவெட்டிக் கிராமசபையின் உபதலைவருமாவார். இவரது சேவையைப் பாராட்டி கனிஷ்ட பல்கலைக் கழக மாணவர்கள் இம்மாதம் 23-ம் திகதி இவருக்கு ஒரு பிரிவுபசாரம் அளிக்கவிருக்கின்றனர்

சுழிபுரம்

## இ.ச.அங்கத்தவர் ராஜினமா

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபை இரண்டாம்வட்டாரஉறுப்பினர் திரு.அ.தையல்பாகர் தமது அங்கத்தவர்பதவியை ராஜினமா செய்துள்ளார். சுகவீனம் காரணமாகவே தமது அங்கத்துவத்தை ராஜினமாச்செய்வதாக தமது ராஜினமாக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். தற்போது கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இவர் ஓர் இளைப்பாறிய பொறியியலாளராவர். இவருடைய இடத்துக்கு ஒரு புதிய அங்கத்தவரைத்தெரிவதற்க்கான நியமனப்பத்திரத்தாக்கல் நவம்பர் 5-ம்திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மகாத்மா பெயர் சூட்டப்படும்

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்புப் பட்டின சபையினரால் சமீபத்தில் செப்பனிடப்பட்ட புதிய சந்தை வீதிக்கு மகாத்மா காந்தி வீதி என்று பெயரிடப்பட விருப்பதாகத்தெரிகிறது.

## ஒரே கியூவால் கஷ்டம்

புலோலி, புதன்

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில்ஆண்களும் பெண்களும் ஒரே கியூ வரிசையில் நின்று மருந்துபெறவேண்டியுள்ளதால் பெண்கள்பெரும் இடைஞ்சலுக்குள்ளாக வேண்டியுள்ளதாம் குறிப்பாக கர்ப்பவதிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாவதாக புகார் கூறப்படுகிறது.

## சாராயம் திரும்புகிறது

கொழும்பு, புதன்

இலங்கையிலிருந்து கிழக்கு ஜேர்மனிக்கு அனுப்பப்பட்ட இரட்டைவடி சாராயம் மீண்டும் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. வெளிநாட்டினர் இதை விரும்பாததாலேயே இவ்விதம் அனுப்பப்பட்ட சாராயம் திரும்பி வருவதாக தெரியவருகிறது.

0 0

## அதிகாரிகள்மீது வழக்கு

வெலிக்கட, புதன்

வெலிக்கட சிறைச்சாலையில் கெஹல்வத்தகே சிறில் தாசநாயகா என்பவரின் கொலை சம்பந்தமாக்சிறைச்சாலை அதிகாரிகள் 16பேருக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை இம்மாதம் 26 ம்திகதி நடைபெறும்.

0 0

## உபதபாற்கந்தோர் வேண்டும்

ஏருவூர் புதன்

ஏருவூர் மேற்குக் கிராமத்தைச் சேர்ந்த இலுப்பையடிச்சேனையில் உபதபால் கந்தோரொன்றை நிறுவும்படி சம்பந்தப்பட்டஅமைச்சையும் அதிகாரிகளையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏருவூர்பட்டின சபையில் நிறைவேற்றப்பட்டது.

0 0

## வெளியேறினர்

இரத்தினபுரி, புதன்

தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக இரத்தினபுரி களனிகங்கைப் பள்ளத்தாக்குப் பகுதியில் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் மக்கள் கவலையடைந்துள்ளனர். இரத்தினபுரிப் பகுதியில் தாழ்ந்த பிரதேசங்கள் நீரில் மூழ்கியதால் அப்பகுதி மக்கள் வேறிடம் நாடியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பேராதனை பல்கலைக்கழகபேராசிரியர் திரு. பி. கனகசபாபதி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார் திருமதி பி கனகசபாபதி பரிசில்களை வழங்குவார்.

## 'சிறுபான்மையினரை செனட்டராக்குக'

ஊரதீவு, புதன்

''தமிழரிடையே உயர்வு தாழ்வு பேதம் அகன்று யாவரும் சரிநிகர் சமானமென்ற நிலைஏற்பட்டால் தான் தமிழினத்தின் உரிமைப் போராட்டங்கள் வெற்றிபெறும் சிறுபான்மையினரை மதிக்கும் வகையில் செனட் சபைக்கு இம்முறை சிறுபான்மைத் தமிழர் பிரதிநிதியாக திரு. இராசலிங்கத்தை நியமிப்பதற்கு தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழரசுக்கட்சி, தமிழ்காங்கிரஸ் கட்சி ஆகியன ஒத்துழைக்கவேண்டும், திரு. இராசலிங்கத்தை நியமிக்கும்படி பிரதமரையும் இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது'' எனக்கோரும் தீர்மானம் ஊரதீவு இளந்தமிழர் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு பொன்னை வேந்தன் தலைமையில் நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் பொருளாளர் ந. இராசதுரை இத்தீர்மானத்தைக்கொண்டுவந்தார்.


வியாபாரம் பெருக

விளம்பரம் செய்க

# S. R. S.

## ஜவுளி மாளிகையில்

## தீபாவளி

## மலிவு விற்பனை

(20-10-69 — 9-11-69)

பெருமளவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இவ்வேளையில் நீங்களும் முன்கூட்டியே வந்து வேண்டிய ஜவுளிகளை தெரிவுசெய்யுங்கள்.

எஸ். ஆர். செல்லத்துரை,

(வட இலங்கையில் முதன்மைபெற்ற மொத்த சில்லறை விற்பனையாளர்)

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராணுவப் புரட்சிக்குப் பின்

# சோமாலியா பிரதம மந்திரி காவலில் வைக்கப்பட்டார்

## உப மந்திரிகளுக்கும் தடுப்புக்காவல்

மொகடிஷ்யூ, அக்டோபர் 22

**வடகிழக்கு ஆபிரிக்கக் குடியரசு நாடான சோமாலியாவில் இரத்தம் சிந்தாமல் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட புரட்சிவாதிகள் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கப்போவதாகவும், பிறநாட்டு உள் விவகாரங்களில் தலையிடப்போவதில்லை என்றும் அறிவித்திருக்கிறார்கள்,**

**சோமாலியாவில் நேற்று ராணுவமும், பொலிஸ் படையும் கூட்டாக ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டன.**

ஆட்சியில் இடம்பெற்றுள்ள ஊழல்களைப் பேக்குவதற்காக ஆட்சியைக் கைப்பற்றியதாகப் புரட்சியாளர்கள் அறிவித்தனர்.

புரட்சியைத் தொடர்ந்து சோமாலியா பிரதம மந்திரி திரு ஈகாலும் அவரது மந்திரி சபையினரும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பின்னர் கிடைத்த செய்தியொன்று கூறியது

### அதிபர் கொலை

சோமாலியாவின் அதிபர் திரு. செர்மாக்கி அண்மையில் சுட்டுப் படுகொலைசெய்யப்பட்டார். அவர் மேற்கு சோமாலியாவில் நாட்டைச் சுற்றிப் பார்த்துவருகையில் பொலிஸ்படையைச்சேர்ந்த ஒருவரால் சுடப்பட்டுமாண்டார். அந்தச்சமயத்தில் அமெரிக்காவுக்குப் போயிருந்த சோமாலியா பிரதம மந்திரி தமது பிரயாணத்தை இடையில் முடித்துக்கொண்டு நாடு திரும்பினர். அதிபர் கொலையுண்டதைத் தொடர்ந்து நாட்டின் சட்டப் பேரவையின் தலைவர் தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டார். அதே சமயம் நாட்டின் பல பகுதிகளிலும் அதிபர் கொலையைத் தொடர்ந்து மக்கள்கொதிப்படைந்திருந்தனர். இதனுல் தெருக்களில் சந்தேகத்துக்கிடமாகத் திரியும் நபர்களை எல்லாம் சுடுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவந்தது.

### திடீர் புரட்சி

இந்தநிலைமையில் ராணுவமும், பொலிஸும் கூட்டாகச் சேர்ந்து புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டன. இந்த ஆட்சி மாற்றம் இரத்தம் சிந்தாமல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. நாட்டின் அரசியல் சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. நாட்டை ஆள்வதற்கு புரட்சிச்சபை ஒன்றும் நிறுவப்பட்டது. இதைதொடர்ந்து பிரதம மந்திரியும் இதர மந்திரிகளும் காவலில் வைக்கப்பட்டனர்.

### மண்டல சார்பில்லை

புரட்சிச் சபையினர் நாட்டின் ஆட்சியாளர் மத்தியில் மலிந்துகிடக்கும் ஊழல்களைப் போக்கவே ஆட்சியைக் கைப்பற்றியதாகக் கூறியிருக்கிறார்கள். வெளிநாட்டுக்கொள்கையில் மண்டல சார்பற்ற முறையில் நடந்து கொள்ளப்போவதாகவும் ஆனல் உரிமைகளை இழந்து அவைகளைப் பெறுவதற்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவு அளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

## கடல்படுகைகளில் அணு ஆயுத ஒழிப்பு

### வல்லரசுகள் திட்டத்தை பாரதம் குறைகூறுகிறது

ஜெனிவா, அக். 22

கடல்படுகைகளில் அணு ஆயுத ஒழிப்புக்கு வழிகோலும் அமெரிக்க--ரஷ்ய திட்டத்தை இந்தியா குறை கூறியிருக்கின்றது.

இந்தத் திட்டம் பெரிய வல்லரசுகள்தாம் நினைத்தது போல் கடல் பிரதேசங்களில் நடந்து கொள்வதற்கு வழிகோலும் என்றும், கடற்கரையிலுள்ள நாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வல்லரசுகள் தம் இஷ்டம் போல் நடந்து கொள்ள வழிவகுக்கும் என்றும் இந்தியா கூறியிருக்கின்றது.

கடல் படுகைகளில் அணு ஆயுதங்களை ஒழிப்பது சம்பந்தமாக அமெரிக்காவும் சோவியத்யூனியனும் அண்மையில் உடன் பாட்டுக்கு வந்திருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டது.

ஜெனிவா ஆயுதக் குறைப்பு மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பேசுகையில் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்,

## 'வன்முறை அதிகரிப்புக்கு மனப்பான்மையே காரணம்'

### எல்லைக்காந்தி கூறுகிறார்

புதுடில்லி, அக் 22

''இன்று உலகில் தோன்றியிருக்கும்வன்முறைகளுக்குப் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்ற வேறுபாடு காரணமல்ல மனப்பான்மைதான் காரணம்''

இவ்வாறு எல்லைக்காந்தி அண்மையில் ஜும்மா மசூதியில் நடைபெற்ற தொழுகையின்போது தமதுரையில் குறிப்பிட்டார்.

அவர்மேலும், பேசுகையில் ''நீங்கள் துணிவோடு துயரத்தைத்தாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் அப்போது தான் மனிதத்தன்மையைக் காணமுடியும் அதுதான்உண்மையானசேவை.

அமெரிக்காவிடமோ, ரஷ்யாவிடமோ உதவிக்குக் கையேந்திச் செல்லும் நாடு தன்மானமுள்ள நாடாகஇருக்கமுடியாது அப்படி உதவி கோருவது அந்தநாட்டின் பலவீனத்தைத்தான் எடுத்துச்காட்டுகிறது நீங்கள் வீரத்தோடும் கடவுளிடம் பயந்தவர்களாகவும் இருக்கவேண்டும் மனிதனிடம், பயப்படவேண்டியதில்லை எத்தகைய ஆத்திரமூட்டும் நிகழ்ச்சிகள் நேர்ந்தாலும் வன்முறையில் ஈடுபடக்கூடாது. அதுதான் உண்மையான காந்திவழி'' எனக் கூறினர்.

## கேரள சட்டசபை கூட்டம் ஒத்திப் போடப்பட்டது

திருவனந்தபுரம், அக். 22 ராஜிநாமா செய்த ஏழுமந்திரிகளின் விளக்கங்களைக் [illegible] திரு. குஞ்சுவும் ஒருவர்இவர் ராஜிநாமாச் செய்தபின்னர் நேற்றுத்தான் சபைக்கு வந்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'இக்கால மாணவர் நடத்தை வருத்தத்தைத் தருகிறது'

### நவராத்திரி விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

உடுவில், புதன்

''ஆதிகாலத்திலிருந்த கல்வி முறைக்கும் இக்காலத்துக் கல்வி முறைக்கும் நிரம்ப வேறுபாடுகளுண்டு. அந்நாட்களில் படிப்போருக்கு போதிய வேலைகள் இருந்தன. பாடசாலையில் படிப்போருக்கு வீடு சென்றதும் தோட்டவேலை, சமையல்வேலை போன்றவை காத்திருந்தன. பெற்ருேருக்கு அடங்கி அவர் தம் சொற் கேட்டு நடந்தனர். இதனுல் வீண் செயலில் ஈடுபட நேரம் கிடைக்கவில்லை. ஆனுல் இன்று பாடசாலை விட்டதும் வீணுன செயலில் ஈடுபட்டு தமக்கும், இனத்திற்கும் சிறப்பாக நாட்டுக்கும் தீங்கு விளையக்கூடிய முறையில் மாணவர்கள் நடப்பது வருந்தக்கூடியது. இன்றைய தினத்தில் நடந்தவையை மறந்து நல்லவையை நினைத்து கற்றதற்கேற்ப ஒழுகவும் சிறந்த பழக்க வழக்கங்களைத் தேடிக்கொள்ளவும் மாணவர்கள் முன்வரவேண்டும்'' என மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலய சைவ மாணவர்மன்றம் நடத்திய சரஸ்வதி பூசை விழாவில் உரையாற்றிய ஆசிரியை பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி றினுர்.

மாணவிகளின் நடனம் மற்றும் இசைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

0 0 0

### அராலியில்

அராலி, புதன்

நவராத்திரி இறுதி நாள் விழா இங்கு ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் தோறும் கொண்டாடப்பட்டன. அராலி தெற்கு அகாயக் குளப்பிள்ளையார் கோவிலில் இந்துவாலிபர் சங்கத்தினுல் நடத்தப்பட்ட விழாவில் வித்துவான் க. கி. நடராசன் கலந்துகொண்டு உரையாற்றினுர்.

அராலிமேற்கு ஸ்ரீ விஸ்வநாத விசாலாட்சி ஆலயத்திலும், அராலி கிழக்கு வாலையம்மன் கோவிலிலும், ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்திலும் விழாக் கொண்டாடப்பட்டது.

அராலி முருகமூர்த்திவித்தியாசாலை, சரஸ்வதி மகாவித்தியாலயம் ஆகிய கல்வி நிலையங்களிலும், களவத்துறை சனசமூகநிலையம், கரைப்பிட்டி ச. ச. நிலையங்களிலும் விழாக்கள் நடை பெற்றன.

வேந்தன் ஆகியோரின் பேச்சுக்களும் இடம்பெற்றன. சங்க உபசெயலாளர் பொ. வைத்திலிங்கம் நன்றி கூறினுர்.

0 0 0

### சுருவிலில்

சுருவில், புதன்

''தமிழன் கலைமகளுக்கு விழா எடுக்கும் வழக்கம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மற்ருேர்வியக்கும் வண்ணம் தமிழினம் வாழ்வதற்கு இதுவே காரணம்'' என சுருவில் றே. க. த. க. பாடசாலையில் நடைபெற்ற கலைமகள் விழாவில் பேசிய ஆசிரியர் திரு. பொ சோமசுந்தரம் சொன்னுர் விழாவுக்குத் தலைமை ஆசிரியர் திரு. நா. கந்தையா தலைமை வகித்தார். பாடசாலைக் கட்டிடத்தின் அவல நிலை குறித்துத் தலைமையாசிரியர் பேசினுர். பஜனை மற்றும் இசை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன.

0 0 0

### மானிப்பாயில்

உடுவில், புதன்

''கல்வி, செல்வம், வீரம் இம்மூன்றில் ஒன்று குறையுமாணுல் வாழ்வு நிறைவாழ்வாகமாட்டாது. வீரத்துடனும் செல்வத்துடனும்வாழ கல்வி அவசியமாகிறது. எனவே மூன்றும் பிரதானமானவைதான் என்ருலும் கல்விக்கு முதலிடம் வைக்கிறேம். அக்கல்விக்கதிபதியான சரஸ்வதியை வணங்குகிறேம். மாணவர்கள் இத்தினத்திலே நல்லொழுக்கம் நிறைந்தோராக செய்த தவறைத் திரும்பச் செய்யாது திருந்தி வாழவேண்டும்.''

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய சைவ மாணவர் மன்றத்தின் முதல் நாள் சரஸ்வதி பூசையில் பேசிய சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியை திருமதி வரதராஜா மேற்கண்டவாறு கூறினுா.

ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு நன்றியுரை கூறினுர்.

### ஏழாலையில்

யாழ்ப்பாணம், வியாழன்

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூக நிலையத்தினர் நவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடினர். கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு, பக்திப்பாடல்கள் என்பனஇடம் பெற்றன.

### முல்லைத்தீவில்

## செய்திச் சுருக்கம்

### புதுடில்லி செல்வார்கள்

கோட்டை, புதன்

உடுப்பிட்டி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சிவசிதம்பரம் தலைமையில் அடுத்த மாதம் முதலாம் திகதி புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சர்வதேசபாராளுமன்ற மாநாட்டுக்கு குழுவொன்று செல்லுகிறது.

0 0

### மாணவர்கள் உதவலாம்

வறக்காப்பொலை, புதன்

பாடசாலை மாணவர்களால் இந்த நாட்டின் எதிர்காலததுக்கு உதவமுடியும்' என்று டெடிகம மகாவித்தியாலயத்தில்விஞ்ஞான கூடமொன்றை திறந்து வைத்து பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கூறினுர்.

0 0

### குழு அமைக்க வேண்டும்

கோட்டை, புதன்

'திணைக்களங்களில் தமிழ் மொழி உபயோகத்தின் போது ஏற்படுகின்ற படுமோசமான பிழைகளைத் திருத்த பிரத்தியேக குழுவொன்று அமைக்கப்படவேண்டும்' என கொழும்பு புகையிரத திணைக்களத்தைச் சேர்ந்த இந்து மன்றத்தின் ஆதரவில் இடம்பெற்ற சரஸ்வதி பூசையின் போது கல்வி வெளியீட்டுத் திணைக்கள அதிகாரி திரு லக்ஷ்மணன் கூறினுர்.

0 0

### அபாயம்

பேராதனை, புதன்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களில் ஒரு சாரார் வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்தின் இதரதுறைகளிலுள்ள மாணவர்கள் எதிர்த்துள்ளதால் இரு சாராருக்குமிடையே மோதல் ஏற்படக் கூடிய அபாயம் தோன்றியிருப்பதால் பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

0 0

### வெட்டியவர் கைது

வியாங்கொடை, புதன்

வியாங்கொடை புகையிரத நிலையத்தில் இரவுநேரத்தில் தந்திக் கம்பிகளை வெட்டிக் கொண்டிருந்த வாலிபர் ஒருவரைப்பொலிசார் கைது

## மேற்கு ஜெர்மனியில்

# பிரான்ட் பிரதமரானதற்கு பல நாடுகள் வரவேற்பு

மேற்கு ஜெர்மனியில்

# பிரான்ட் பிரதமரானதற்கு பல நாடுகள் வரவேற்பு

பொன், அக். 22

மேற்கு பெர்லின் புதிய பிரதமராக திரு. வில்லி பிரான்ட் தெரிவு செய்யப்பட்டிருப்பதை பல நாடுகள் வரவேற்றிருக்கின்றன.

மேற்குஜெர்மனியில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் டாக்டர் கீஸிங்கரின் கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கு அதிகப்படியானவாக்குகள்கிடைத்தன ஆனல் ஆட்சியை அமைக்கும் அளவு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. திரு. வில்லி பிரான்டின் சோஷல் ஜனநாயகக்கட்சி இரண்டாவதாக வந்தது. மூன்ருவதாக வந்த சுதந்திர ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து திரு. பிரான்ட் தமது அரசாங்கத்தை அமைத்திருக்கிருர். முன்பு கீசங்கர் ஆட்சியில் திரு. பிரான்ட் வெளிநாட்டு அமைச்சராக இருந்து வந்தார்.

## நிக்ஸன் வாழ்த்து

திரு. பிரான்ட் பிரதமமந்திரியாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டி அவருக்கு அமெரிக்க அதிபர் நிக்ஸன் செய்தியொன்று அனுப்பியிருக்கிருர்.

## இஸ்வெஸ்டியா பாராட்டு

சோவியத் யூனியனும் திரு. பிரான்ட் பிரதமராகியிருப்பதைப்பாராட்டியிருக்கிறது. சோவியத் பத்திரிகையான இஸ்வெஸ்டியா வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் திரு. பிரான்ட் பெரிய நாஸி எதிர்ப்பாளராக இருந்து வந்துள்ளார் என்று பாராட்டியிருக்கின்றது.

## முதல் வேலை

போலந்து மற்றும் பல நாடுகள் திரு. பிரான்டின் புதிய அரசாங்கத்தை வரவேற்றிருக்கின்றன. திரு. பிரான்ட் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், நாட்டின் பொருளாதாரத்தைஸ்திரப்படுத்துவதே தமது முதல் வேலையாக இருக்கும் என்று அறிவித்திருக்கிருர்.

மார்க்நாணயத்தின் மதிப்பு சம்பந்தமாக திரு. பிரான்டின் அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கைகளில் இறங்கக்கூடும் என்று நோக்கர்கள் கூறுகிருர்கள்.

## பாக் அதிபரின் கவலை

கராச்சி, அக். 22

பாகிஸ்தானில் மீண்டும் சட்டம் ஒழுங்கு ஆகியவை புறக்கணிக்கப்படுவது குறித்து அதிபர் யாஹ்யாகான் தமது முக்கிய அதிகாரிகள் மந்திரிகள், கவர்னர்கள் ஆகியவர்களுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளனர்.

ராணுவச் சட்டம் அமுலில் இருந்த பொழுதிலும் பாகிஸ்தானில் பல இடங்களில் வேலைநிறுத்தங்களும் அசம்பாவிதங்களும் இடம் பெற்று வருவது யாஹ்யாகானுக்கு கவலையளித்திருப்பதாகத் தெரிகின்றது. இந்தச் சம்பவங்களுக்கெல்லாம் விரைவில் ஒரு முடிவுகட்டுவதற்கு அவர் தீர்மானித்திருக்கிருர். இதுசம்பந்தமாக ஆலோசிக்க மந்திரிசபைக் கூட்ட மொன்றையும் அவர் அழைத்திருக்கிருர்.

---

## மேற்கு வங்கத்தில்

# துர்க்கைவிழா குழப்பம்: 18 பேர் பலியாகினர்

கல்கத்தா, அக். 22

மேற்கு வங்காளத்தில் ஜவாக்டால் என்ற இடத்தில் நடைபெற்ற கோஷ்டி மோதல்களில் சுமார் 18பேர் வரை கொலையாகியிருப்பதாகத் தெரிகின்றது.

துர்க்காதேவியின் விழாவின்போது இந்த மோதல் இடம்பெற்றது. துர்க்கையின் படிவங்களை ஆற்றில் கொண்டுபோய் விடும் விழாவின்போது இன்னொரு சமூகத்தின் புனித ஸ்தலத்தின் அருகில் இந்த மோதல் ஏற்பட்டதாம். அந்த ஸ்தலத்துக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் தெருக்களில் கொள்ளையடித்தல், கத்திக்குத்து போன்ற சம்பவங்களில் ஈடுபடுகிறவர்கள் எவரையும் பார்த்தவுடனேயே சுட்டுத்தள்ளும்படி பொலிசாருக்கு மேற்கு வங்க அரசு உத்தரவிட்டிருக்கின்றது. ஆயினும் 32 மணி நேர ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை 530 பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

இந்தச் சம்பவங்கள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு நடைபெற்றிருக்கவேண்டும் என்று அதிகாரிகள் கருதுகிருர்கள். ராணுவத்தினர் நகரின் அருகாமையிலேயே முகாமிட்டிருக்கிருர்கள்.

குழப்பங்களை அடுத்து இங்கு 18 பேர் கொலையுண்டிருப்பது தெரியவந்ததாகவும் பல கடைகள் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் கூறினர்கள்.

## பெருமான் உடல்நிலை கவலையளிக்கிறது

அமிர்தசரஸ், அக் 22

சண்டிகாரை பஞ்சாப்புடன் இணைக்க வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருந்து வந்த சீக்கியத் தலைவர் தர்சன்சிங் பெருமான் உண்ணாவிரதம் தொடங்கி 70 நாட்களாகின்றன.

உண்ணாவிரதம் இருந்து வரும் திரு, தர்சன்சிங் பெருமானின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்து வருவதாகவும், இவருடைய ஈரல் சரிவர இயங்கவில்லையென்றும் இவரைப் பரிசோதித்த டாக்டர்கள் கூறுகின்றனர்.

பிரதமர் இந்திரா, உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்து எழுதிய கடிதத்திற்கு தர்சன் சிங்பெருமான், சண்டிகாரை பஞ்சாப்புடன் சேர்ப்பதாக அறிவித்தால்தான், உண்ணாவிரதத்தை கைவிடுவதாக அவர் திட்டவட்டமாக எழுதியுள்ளார்.

இக்கடிதம் சம்பந்தமாக பஞ்சாப் பழைய மந்திரி தியானிசிங்ரேவஎலா பிரதமர் இந்திராவோடு 20 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தர்சன்சிங்பெருமான் தன்னுடைய உண்ணாவிரதத்தை நிறுத்தியதும் சண்டிகார் பிரச்னையில் தன்னுடைய முடிவைஅறிவிப்பதாகபிரதமர் இந்திரா பேச்சுவார்த்தையின் போது வாககுறுதி அளித்துள்ளார்.

---

# கேரள சட்டசபை கூட்டம் ஒத்திப் போடப்பட்டது

திருவனந்தபுரம், அக். 22

ராஜினமா செய்த ஏழுமந்திரிகளின் விளக்கங்களைக் கேட்டபின்னர் நேற்று கேரள சட்டசபைக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இன்று அறிக்கை சமர்ப்பித்த பழைய மந்திரிகள் அனைவரும் மார்க்சிஸ கம்யூனிஸ்ட் கட்சியையும், முதல்மந்திரி திரு. நம்பூதிரிபாத்தையும் குற்றம்சாட்டினர்கள். முதல்மந்திரி திரு. நம்பூதிரிபாத் ஒருதலைப்பட்சமாக நடந்துகொண்டிருக்கிருர் என்றும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி தனது கூட்டணிக்கட்சிகளை ஒழிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்திருப்பதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்கள்

இன்று சபையில் பேசியவர்களில் பழைய மந்திரி திரு. குஞ்சுவும் ஒருவர்இவர் ராஜினமாச் செய்தபின்னர் நேற்றுத்தான் சபைக்கு வந்தார். ......

## ஜப்பானிலிருந்து மின்தறிகள்

இமையாணன், புதன்

சுமார் எட்டு லட்சம் ரூபா பெறுமதியான மின்தறிகள் ஜப்பானிலிருந்து இலங்கைக்கு வரவிருக்கின்றன உடுப்பிட்டி வல்லையிலுள்ள 'இலங்கை நெய்தல் நூற்றல் ஆலை' ஸ்தாபனத்திற்கென இருபது மின்தறிகள் ஜப்பானிலிருந்து இம்மாதம் முதலாம் திகதி கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் இம்மாத முடிவில் இலங்கைவந்தடையுமெனவும் தெரிய வருகிறது. — —

## சிரியா எல்லையை மூடிவிட்டது

டமாஸ்கஸ், அக் 22

சிரியா தனது லெபனுனுடனன எல்லையை மூடிவிட்டது.

லெபனுனில் அரபுக் கொரில்லாக்களுக்கும் அரசாங்க கலால் படையினருக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அரபுக் கொரில்லாக்களுக்குலெபனுன் ஆதரவு தர மறுத்து வருவதே இப்பொழுது சிரியா எல்லையை மூடியதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

## வேண்டுகோள்

உடுவில், புதன்

''எதிர்கால இளைஞர் சமுதாயம் தனக்கு வர இருக்கும் ஆபத்தை உணர்ந்துவிட்டது. எதிர்கால தமிழ் இளைஞர்களுக்கு வழிகாட்டி தக்க பாதையில் இட்டுச் செல்லவும் அவற்றுக்குத் தலைமை தாங்கவும் இளைஞர்கள் முன்வரவேண்டும். உண்ணாவிரதமோ, சத்தியாக்கிரகமோ எமது உரிமைகளைப்பெற்றுத்தர மாட்டாது. ஒன்ருகநாம் திரண்டு ஒற்றுமைப்படுவதன்மூலமே உரிமைகளைப் பெறமுடியும் இளைஞர்கள் இது குறித்து அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.''

ஈழத்தமிழ் நாடு இளந்தமிழர் விடுதலை இயக்கச் செயலளார் திரு. கே. ஜெயரட்ணசிங்கம் விடுத்துள்ள வேண்டு கோளில் இவ்வாறு கூறியுள்ளார். —

## பாகுபாடின்றிக் கொண்டாடும் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிருர்களோ அங்கெல்லாம் கலைமகள்விழா கொண்டாடப்படுகிறது. சாதி, சமய வேறுபாடின்றி சக்கிவழிபாடு பல இடங்களிலும் பண்டு தொட்டு நடைபெற்று வந்துள்ளது ஆதாரபூர்வமாக அறியக்கிடக்கின்றது

இவ்வாறு பலாலி கனிட்ட பகல்கலைக்கழகத்தில்கொண்டாடப்பட்ட கலைமகள்விழாவின் போது திரு. மு. வா. பேசுகையில் கூறினர்.

விழா விரிவுரையாளர் திரு. சு. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. செல்வி சந்திரலோசனி சிவஞானத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறறது.

## டிராக்டர் ஆற்றில் விழுந்தது

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவில் இருந்து கொக்குத்தொடுவாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப்பசளை ஏற்றிச்சென்ற டிராக்டர் நாயாற்றில் வீழ்ந்து பசளை மூடைகள் யாவும் சேதமடைந்தது மல்லாமல் டிராக்டரும் பலத்த சேதமடைந்துள்ளது. சாரதி தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

டிராக்டரை பசளை மூடைகளுடன் தாம்போதியில்ஏற்றிய போது தாம்போதியை தாங்கிச்செல்லும் கம்புகள் திடீரெனமுறிந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

---

கொண்டாடப்பட்டது.

அராலி முருகமூர்த்திவித்தியாசாலை, சரஸ்வதி மகாவித்தியாலயம் ஆகிய கல்வி நிலையங்களிலும், களவத்துறை சனசமூகநிலையம், கரைப்பிட்டி ச. ச. நிலையங்களிலும் விழாக்கள் நடைபெற்றன.

0 0 0

## உடுவிலில்

உடுவில், புதன்

தமிழ்இசையில் இன்று பல கலப்படங்கள் நிகழ்ந்துள்ளன. அந்நிய இசைகளும், டப்பாச் சங்கீதங்களும் அதிகரித்துள்ளன. இவைகள் நல்ல தமிழ் இசை வளர்ச்சியை தடைப்படுத்துகின்றன. இங்கு இசை நன்கு வளரவேண்டுமாளுல் டப்பா சங்கீதங்கள் ஒழியவேண்டும்.

உடுவில் கிராமசபைக்கலை வளர்ச்சிக் கழகம் உடுவில் திறந்தவெளியரங்க நவராத்திரி கலைவிழா இசைநிகழ்ச்சிகளுக்கு தலைமைவகித்துப் பேசிய யாழ்ப்பாணம் வடுமானவரி இலாகா அதிபர் திரு. கே. தனபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

இன்னிசைக் கச்சேரியும் வில்லுப்பாட்டும் விழாவில் இடம்பெற்றன.

0 0 0

## இறைவனுக்கு மொழிவேறுபாடில்லை

கோப்பாய் புதன்

''இறைவனின் அருளைப் பெற சக்தியின் திருவருள் முக்கியமானது. எனவே தான் சிவமும் சக்தியுமாக இரண்டறக்கலந்து அம்மையப்பனுக விளங்குகின்றுன் இறைவன்'' என கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நடாத்தப்பட்ட நவராத்திரி விழாவில் பேசுகையில் மன்றச்செயலாளர் திரு. ஆர். பி, ஹரன் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், சிவம் என்பது தென்சொல், சக்தி வடசொல் வடமொழியும் தென்மொழியும் கலந்து விளங்குபவன் இறைவன் இறைவழிபாட்டில் மொழிப்பிரச்னைக்கே இடமில்லை என்ருர்.

மன்றத்தலைவர் திரு. பொ. நி. சம்பந்தன் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

0 0 0

## ஊரதீவில்

ஊரதீவு, புதன்

ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலைப் பெற்ருர் ஆசிரியர்சங்கத்தின் சார்பில் வித்தியாசாலையில் கலைமகள் விழா கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் க. சி. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வித்தியாசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும், ஆசிரியர் சு. யோ. பூராசா, திரு பொன்னை

---

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூக நிலையத்தினர் நவராத்திரி விழாவை சிறப்பாக கொண்டாடினர். கதாப்பிரசங்கம், வில்லுப்பாட்டு, பக்திப்பாடல்கள் என்பன இடம் பெற்றன.

## முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் சரஸ்வதி பூசை மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பண்டிதர் ந கந்தையா, முல்லைமணி திரு. வே. சுப்பிரமணியம் ஆகியோர் சக்தி வழிபாடு பற்றி எடுத்துரைத்தனர்.

0 0 0

முதல்முதலாக இம்முறை முல்லைத்தீவு பட்டணசபை ஊழியர்களால் மின்சாரநிலையத்தில் வெகு சிறப்பான முறையில் சரஸ்வதி பூசை கொண்டாடப்பட்டது.

## கோப்பாயில்

கோப்பாய், புதன்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆகியவற்றில் சரஸ்வதிபூசை, நவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவையொட்டி இன்னிசைக்கச்சேரி, சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள் முதலியன இடம்பெற்றன.

## இறக்குவானையில்

இறக்குவானை, புதன்

இறக்குவானை மாரியம்மன் கோவிலில் விஜயதசமிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாஸ்வரக்கச்சேரியும் வில்லுப்பாட்டும் விழாவில் இடம்பெற்றன.

(உடுவில் நிருபர்)

## காங்கேசன்துறையில்

காங்கேசன்துறை. புதன்

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சரஸ்வதி பூசை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது ஒவ்வொரு பகுதியிலும் பூசைகள் நடைபெற்றன.

## புதிய தூதர்

கோட்டை, புதன்

இத்தாலிக்கு இலங்கையின் தூதுவராக திரு. றிச்சார்ட் ஒலியன் கன்னங்கரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றிரவு விமான மூலம் ரோம் நகருக்கு விமானத்தில்பயணமானர்.

சிலமாதங்களுக்கு முன்னர் கார் விபத்தொன்றில்சிக்கிய இத்தாலியில் இருந்த இலங்கைத்தூதர் திரு. விஜயகோனின் இடத்துக்கு திரு. கன்னங்கரா நியமிக்கப்பட்டுள்ளார்.

---

0 0

## வெட்டியவர் கைது

வியாங்கொடை, புதன்

வியாங்கொடை புகையிரத நிலையத்தில் இரவுநேரத்தில் தந்திக் கம்பிகளை வெட்டிக் கொண்டிருந்த வாலிபர் ஒருவரைப்பொலிசார் கைது செய்தனர். இவர் ஏற்கனவே வெட்டி வைத்திருந்த 600 யார் தந்திக்கம்பிகளும மற்றும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

## மக்கள் மாணவ ஆசிரியர் பரீட்சை முடிவுகள்

கோட்டை, புதன்

கடந்த செப்டம்பர்மாதம் நடைபெற்ற ஆங்கில மாணவ ஆசிரியர் பரீட்சை முடிவுகள் அடுத்த மாத முடிவிற்குள் வெளிவருமெனத் தெரிகிறது.

0 0

## லோகநாதன்திட்டம் அங்கீகாரம்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்தி சம்சந்தமாக திரு. சி. லோகநாதன் தெரிவித்த சேமிப்புத் திட்டத்தைஉலக வங்கி அங்கீகரித்துள்ளது.

0 0

## இலங்கைஅங்கீகரிக்கும்

ரஷ்யாவிலுள்ள லுமும்பா பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்ற இலங்கையரின் தராதரத்தை அங்கீகரிக்கவும் அவர்களுக்கு வேலைவழங்கவும்அரசாங்கம் முன்வந்துள்ளது.

0 0

## கைதிகள் ஓடி மறைந்தனர்

மத்துகம கோர்ட்டில் 3 வருடக் கடுங்காவல் தண்டனை பெற்று கங்கொடைவில தடுப்புமுகாமில் சிறைவைக்கப்பட்டிருந்த இரு வாலிபர்கள் தப்பிஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரில்லாப் பயிற்சி

இவ்வருட முடிவிற்குள் இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த நால்வர் கொரில்லாப்பயிற்சி பெறுவதற்காக சிங்கப்பூர் செல்கின்றனர். அடுத்தஆண்டு எட்டுப் பேர் செல்வார்களாம் இவர்கள் அனைவரும் திரும்பிவந்து இலங்கை ராணுவ வீரர்களுக்கு இப்பயிற்சியைஅளிப்பார்ளெனக் கூறப்படுகிறது.

## இணைப்புக்குழுக் கூட்டம்

திருகோணமலை, புதன்

திருக்கோணமலை மாவட் இணைப்புக் குழுக் கூட்டம் அடுத்த மாதம் 6-ம் திகதி காலை திருக்கோணமலை மாவட்ட அதிபர் தலைமையில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

தேசங்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று சுரண்டுவதை நிறுத்தினலொழிய உண்மையான ஆயுத ஒழிப்பு நடைபெருது. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Elanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஐப்பசி மாதம் 7-ந் திகதி (23-10-69)


## அரசியல் போக்கு [2]

ஈழத்திலே தமிழ் அரசியல் கட்சிகளும், தலைவர்களும், தங்கள் மனப்பான்மையில் பிடிவாதம் காட்டாமல் எவ்விதம் வளைந்து கொடுத்து வந்திருக்கிறார்கள் என்பதற்குச் சில உதாரணங்களை நேற்று குறிப்பிட்டிருந்தோம். எதிர்காலம் மேலும் கடினமானதாகவுமிருக்கக்கூடும். ஆகவே மற்ற சமூகத்தவருடனும் அரசியல் கட்சிகளுடனும் எவ்வித மனப்பான்மையைக் கொள்ள வேண்டுமென்பதையும், அதற்கேற்ப தங்கள் கொள்கைகளையும் வேலைத் திட்டத்தையும் எவ்விதம் வகுத்துக்கொள்ள வேண்டுமென்றும் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ்த் தலைவர்களும் நிதானமாக யோசித்து அதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது, அரசியல்துறையில் மட்டுமல்ல, மற்ற விஷயங்களிலும் தமிழரின் வெற்றிக்கு இன்றியமையாததாகும். தமிழ்ப் பொதுமக்கள் இதைப் பற்றி நன்கு சிந்தித்து, சமயோசித புத்தியுடன் நடந்துகொள்வதைப் பொறுத்தே ஈழத் தமிழரின் எதிர்கால நன்மையும் சுபீட்சமும் இருக்கும்.

இதேசமயத்தில், இந்நாட்டிலே பெரும்பான்மை சமூகத்தவராக இருக்கும் சிங்களத் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் ஒரு முக்கிய விஷயத்தை ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாடு அரசியலில் விடுதலைஅடையு முன்பாக இந்நாட்டிலே சிங்களமும், தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்க வேண்டுமென்று தேசபிதா டி. எஸ். சேனநாயக்கா காலத்திலேயே தீர்மானித்து அவ்விதமே பத்துவருட காலம் நடந்துவந்தது. அரசியல் ஞானத்துடன் கூடிய அந்த ஏற்பாட்டைக் குலைத்து, ஒருதலைப்பட்சமாக தனிச் சிங்களச்சட்டம் நிறைவேற்றியபின்தான், நாட்டிலே சமூகஒற்றுமையும் அமைதி ஜனநாயகம் வெற்றிபெற முடியாதென்றும், தமிழர் அளித்த ஒத்துழைப்பால்தான் இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டதென்றும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பன்முறையும் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். தமிழ் சமூகத்துக்கு மொழிவிஷயமாகச் செய்யப்பட்டுள்ள அநியாயத்தை, வாயால் சொல்லாவிட்டாலும் அவர் மனம் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். தமிழரின் குறைகளைத் தீர்ப்பதாக சில உறுதிமொழிகளை அவர் அளித்தாரென்றாலும், அவற்றை அவர் நிறைவேற்றமுடியாமல்போனதால் தமிழ்மக்கள் மனமுடைந்து பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். இந்நாட்டில் மீண்டும் தேசிய ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட்டு நாடு முன்னேற வேண்டுமென்று விரும்பும் தேசாபிமானிகள் இந்நிலைமையைக் கண்டு வாய்மூடி மௌனிகளாக இருக்க முடியாது.

அடுத்ததேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியை எப்படிக் கைப்பற்றுவதென்பதைப் பற்றி பல அரசியல் கட்சிகளும், தலைவர்களும் இச்சமயம் யோசிப்பது இயற்கையே, ஆனல் நாட்டின் மேலான நன்மையிலே உண்மையிலே கவலைகொண்டவர்கள் தமிழருக்கு மொழி விஷயமாகச் செய்யப்பட்டுவிட்ட பெரிய அநியாயத்தைத் தீர்க்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து, பிடிவாதம் காட்டாமல் அவர்களும் வளைந்துகொடுப்பதில்தான் நம் நாட்டின் எதிர்கால மேன்மையும் வளர்ச்சியும் அடங்கியிருக்கும். தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றி, அதை அமுல் செய்துவரும் முறை தமிழருக்குப் பெரும்மனவேதனை அளித்து அவர்களை இந்நாட்டிலே இரண்டாம் பட்சப் பிரஜைகளாக்கியுள்ளது. இதேசமயம் மாவட்டசபை ...

# காந்திஜி கால்பட்ட புனித நகரில் காங்கிரஸ் மாநாடு

அட்டன், ராமானுஜம் நகரில் 22-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை நடைபெறும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 23-வது மாநாட்டையொட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளிவருகிறது.

**- எழுதியது: பெரி. சுந்தரலிங்கம் -**

'காந்திஜியின் கால்பட்ட இடம் புனித இடம்; அவர் குடியிருந்த இடம் கோயில்' என்றார் நேருஜி.

-காந்திஜியின் கால்பட்டு புனிதத்தன்மை பெற்ற இடம்தான் கட்டன் டன்பார் மைதானம்.

1927-ல் மகாத்மா காந்தி ஹரிஜனர் நிதி சேர்ப்பதற்காக இலங்கையில் சுற்றுப்பயணம் செய்தபோது இதே கட்டன் டன்பார் மைதானத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில் திரண்டுவந்த மக்கள் சமுத்திரத்தின் முன்தான் பேசி, சிறப்புச் செய்தார்

காந்திஜியின் நூற்றாண்டு விழா நடைபெறும் இந்தப் பெருமை மிக்க ஆண்டிலே, காந்திஜியின் கால்பட்டு புனிதமான கட்டன் டன்பார் மைதானத்திலே காந்திஜியின் வாரிசான நேருஜியினல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது 23-வது மாநாட்டை சிறப்புற நடத்துவது எல்லாவகையிலும் எண்ணி மகிழக்கூடிய நிகழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

'நீரோடை நிலம் கிழிக்க நெடுமரங்கள் காடாக்க' என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசனின் வரிகளை நினைவுபடுத்தும் மலையகத்திலே, ஆண்டாண்டு காலமாய் உழைத்து, உழைத்து, உதிரத்தை வியர்வையாக்கி உடலை உரமாக்கி, காடு வெட்டி, கழனி திருத்தி, இந்நாட்டைப் பொன் கொழிக்கும் பூமியாக்கிய தோட்டத் தொழிலாளர்கள் இன்று—

'நாட்டை நினைப்பரோ-எந்த
நாளினில் போயதைக் காண்போமென்றே
-அன்னை வீட்டை நினைப்பாரோ அவர்
விம்மி விம்மி விம்மி அழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே!'

என்று பைந்தமிழ்க் கவிஞன் பாரதி பாடியதற்கு இலக்கணமாய் நடமாடும் இலக்கியமாய், கஷ்டஜீவனம் நடத்திக்கொண்டிருக்கும் கால கட்டத்தில்தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 23-வது மாநாடு கட்டன் ராமானுஜ ...

லச்சாமி, தனது ஈராண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போல், 'இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முப்பதாண்டு காலம், தூங்கிக் கிடந்த ஒரு பெரும் சமுதாயம் துணிவுற்றெழுந்த சரித்திரகாலம்' என்பது குறிப்பிடத்தக்கது.

கும் ஈடாகாத நிலையை இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அடைந்திருக்கிறது.

**பொருளாதாரத்திட்டம்**

'இந்த நாட்டில் எந்தவொரு தொழிற்சங்கமும் செய்யத் துணியாததும், தோட்டத் தொழிலாளரின்

தோட்டத் தொழிலாளர்கள் 'பரம்பரைக் கூலிகளாகவே வாழ்ந்து மாளாமல் அவர்களின் வருங்கால சந்ததியினர் விஞ்ஞானத்துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும் பயிற்சிபெற்று முன்னேற இது நல்ல வாய்ப்புகளை உண்டாக்கும்'

இ. தோ. கா. லிமிட்டெட்டின் முதலாவது பணியாக மஸ்கெலியாவைச் சேர்ந்த ரிச்சார்ட்டன்தோட்டத்தை வாங்க இப்பொழுது பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டுள்ளனர்.

# தாழ்வுற்ற மக்கள் சமூகம் தழைத்தெழ வழி காண்பர்

'அடித்தளத்தையே ஆட்டிஅசைத்த பெரும் புயல்களையெல்லாம் சமாளித்து, சொல்லரிய சோதனைத்தீ பலவற்றில் குளித்தெழுந்து, மனங்கலங்காது மலையென நிமிர்ந்து, ஒரே நோக்குடன் துணிந்து தொடர்ந்து முன்னேறியதால்தான், இந்நாட்டிலுள்ள மற்றெல்லாத் தொழிற்சங்க அங்கத்துவத்தையும் இணைத்துப் பார்த்தாலும் இ. தொ. கா.வின் அங்கத்துவ பலத்தில் அரைப்பங்குக்

பொருளாதாரப் புனர்வாழ்வுக்கு உறுதுணையானதுமான இதொகா லிமிட்டெட் அங்குரார்ப்பணம் தொழிற்சங்க இயக்கத்துக்கே ஒரு புதுப்பரிமானத்தைப் புலப்படுத்தியுள்ளது'

'கூட்டுறவு அடிப்படையில் தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயம் செய்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்த இத்தகைய ஒரு ஸ்தாபனத்தின் மூலம் ஒரு தொழிற்சங்கம் செயல்படுவது இந்நாட்டில் இதுவே முதல் தடவையானதாகவும் வெகுநாள் கண்ட கனவு நனவாகவும் அமைந்தது'

**பிரமிக்கதக்க வளர்ச்சிதான்**

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இப்படியாக அரசியல் ரீதியிலும் தொழிற்சங்க ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் திட்டமிட்டு செயல்பட்டு வருவதால்தான் இன்று இலங்கையில் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வந்தாலும் சரி, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும்சரி இ. தொ. கா.வின் துணையை நாடிநிற்கும்நிலை உருவாகியுள்ளது.

# நாட்டின் முன்னேற்றம் பற்றி வகுப்புவாதிகளுக்கு கவலையில்லை

## இ.தொ.கா. பொதுச்செயலாளர் அறிக்கை

**இ. தொ. கா. வின் 23வது மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எஸ். செல்லச்சாமியின் ஈராண்டு அறிக்கையிலிருந்து சில முக்கிய பகுதிகள் வருமாறு:**

(தொகுப்பு: கே. சிவராஜசூரியர்)

**தேசிய அரசாங்கம்**

1969-ம் ஆண்டு ... ச்சு மாதத்தோடு நான் காண்டுகள் பூர்த்தியாகும் ...

கம் கொண்டுள்ள வழிமுறைத் திட்டங்களோ பொருத்தமானவையாயில்லை.

**தோட்டத்தொழிலாளி**

1964 அக்டோபர் 30-ம் திகதிக்கு முன் இந்தியர்களாகப் பதிந்துகொண்டவர்களுக்கு அந்தச் சலுகையில்லையென்பதைக் காண ஆச்சரியமாயிருக்கிறது. இம்மாதிரி ஒரேஇனத் தொழிலாளருள பேதம் காட்டுவது பொருந்தாதென்பதைநமது தலைவர் பிரதமமந்திரியிடம் விளக்கியுள்ளார்.

**பிரஜாஉரிமை மனுக்கள்**

# ஐயாறன் எழுதுவது

ஆவி உலகத்துடன் பேசுவதைப்பற்றிய கட்டுரையைப் பலரும் ஆவலுடன் படிப்பதாக அறிகிறேன். பல கடிதங்கள் கிடைப்பதுடன், மீரிகமையிலே திரு. மாணிக்கவாசகம்பிள்ளைக்கும் நேரில் பலர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. பல அன்பர்கள் இறந்த தங்கள் உறவினருடன் பேச ஆவல் கொண்டிருக்கிறார்கள்.

பேசுவதற்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்று ஓர் அன்பர் கேட்கின்றார். கட்டணம் எதுவுமில்லை. வெற்றிலைகூட கொண்டுவரப்படாதென்று திரு. பிள்ளை கண்டிப்பாகக் கூறியுள்ளார். மீரிகமைக்குப் பக்கத்திலுள்ள சிங்களக் குடும்பத்தார் பேச வருகையில் அவர்களுக்குத் தேநீரும் கொடுக்கின்றார்கள். வசதியுள்ள பெரிய குடும்பத்தைச் சேர்ந்த திரு. பிள்ளை இதை ஒரு தெய்வீகப் பணியாகவே செய்கிறாரேயன்றி வருவாய்க்காக அல்ல.

அவரது வாழ்க்கை ருசியானது. வாலிபத்திலே பச்சை நாத்திகராக இருந்தவர். தெருவிலே வீபூதி ருத்திராட்சம் தரித்து யாராவது சென்றால் அவரை அழைத்து வீட்டில் நல்ல விருந்தளித்துவிட்டு இந்தச் சாமி வேஷமெல்லாம் போட்டு ஊரை ஏமாற்ற வேண்டாமென்றும், இதெல்லாம் வெறும் பித்தலாட்டமென்றும் எச்சரிக்கை செய்து அனுப்புவராம். பின்னர் கொழும்பிலே ஒருவர் நாடிசாத்திரம் கூறுவதாக அறிந்து, அதுவும் ஒரு ஏமாற்று வித்தை என்று கூறி, அதை அம்பலப்படுத்துவதற்காகச் சென்று பார்த்தார். அவரது கைரேகைக்கு ஓர் ஏடு கிடைத்தது. அதில் உள்ளதெல்லாம் தனக்கு அப்படியே பொருத்தமாக உள்ளதென்பதைக் கண்டார். பின்னர் பலசோதனை செய்து பின்தான் தெய்வ நம்பிக்கை ஏற்பட்டதாம். நாத்திகராக இருந்தவர் இன்று பரம ஆத்திகராக மாறியிருக்கிறார்.

0 0 0

யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில் 'இந்த இருபதாம் நூற்றாண்டிலேவாழும் தாங்கள் இதனை உண்மையெனநம்பியதையும்இதைப் பத்திரிகையில் எழுதத் துணிந்ததையும் நினைக்கும்போது மிக நாணம் உறுறேன். தங்களது அறிவின்மையை உணரத் துயரமாகவுள்ளது' என்று எழுதிவிட்டு, 'ஆவி உலகத்தோடு பேசிய ஏனைய விவரங்களையும் பத்திரிகையில் தொடர்ந்து எழுதவும். வாசித்து உண்மை அறிய ஆவல் உடையேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆத்திகர்களைக் கண்டால் நாத்திகர்களுக்கும் இப்படித்தான் இருக்கும். ஆனல் அனுபவத்தில் நம்பிக்கை வந்துவிட்டால் அவரே பரம ஆத்திகராகிவிடுவார். இந்த அன்பரைப் போல நம்பிக்கையில்லாமல் பலபேர் இருக்கலாம். நேரில் சென்று பார்த்தால் உண்மையை உணரலாம். எதிர்காலத்தைப்பற்றிய சோதிடங்களை ஆவிகளிடம் கேட்கப்படாதென்றும், அவர்கள் இங்கு வாழ்கையில் அவர்களுக்கு என்ன அறிவு இருந்ததோ அவ்வளவுதான் அங்கும் இருப்பதாகத் தெரிகிறது.

0 0 0

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த திரு. செல்லப்பா இரத்தினசாமி (61) 'இறந்தவர்களுடன் பேசுவது முற்றிலும் உண்மையானது இருபது வருடங்களுக்கு முன்னர் இதை நான் நேரில் பார்த்தேன். வட்டுக்கோட்டையிலிருந்த முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினரும் ஆடிட்டர் ஜெனரலாகவுமிருந்த திரு. கே. கனகரத்னமவர்கள் அவரது இறந்த தாயின் ஆவியுடன் 31 நாள் கதைத்ததை நான் நேரில் பார்த்தேன்' என்று பல விவரங்களைத் தருகின்றார்.

0 0 0

ஆவியாய் ஆவியுமாகி
அருக்கமாய்ப் பெருக்கமாகிப், பாவியர் பாவம் தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகிக், காவியங் கண்ணளாகிக் கடல்வண்ணமாகி நின்ற, தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற்றூரனாரே.

— அப்பர் அடிகள்

...டுவதோடு, குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும் போக்குவரத்துச் செய்வதிலும் வேலைவாய்ப்புப் பெறுவதிலும் வியாபாரத் தொழில் ...

தப்படுவதையே காண்கின்றனர். அரசாங்க அலுவல்களுக்காகப்போகும் மனுக்களில் வம்சாவழிப் பிரஜையா பதிவுப்பிர ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலத்திலேயே [illegible] அவ்விதமே பத்துவருட காலம் நடந்துவந்தது. அரசியல் ஞானத்துடன் கூடிய அந்த ஏற்பாட்டைக் குலைத்து, ஒருதலைப்பட்சமாக தனிச் சிங்களச்சட்டம் நிறைவேற்றியபின்தான், நாட்டிலே சமூகஒற்றுமையும் அமைதியும் குலைந்தது. ஜனநாயகம் வெற்றிபெற வேண்டுமாயின் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் திருப்தியுடன் நிம்மதியாக வாழமுயலவேண்டும். இரு மொழிகளும் அரசாங்க மொழிகளாக இருந்ததை திடீரென மாற்றிய நியாயமென்ன?

தமிழரின் ஒத்துழைப்பு இல்லாமல் இந் நாட்டிலே [illegible] சிங்களச் சட்டத்தை நிறைவேற்றி, அதை அமுல் செய்துவரும் முறை தமிழருக்குப் பெரும்மனவேதனை அளித்து அவர்களை இந் நாட்டிலே இரண்டாம் பட்சப் பிரஜைகளாக்கியுள்ளது. இதேசமயம் மாவட்டசபை முதலிய விஷயமாக அளித்த உறுதிமொழியையும் நிறைவேற்றமுடியாத நிலையில், பிரதமர் இதுபற்றி அரசியல் ஞானத்துடன் நிதானமாகச் சிந்தனைசெய்து, தீர்க்கதரிசனத்துடன், காரியம் செய்ய முற்பட்டாலே இலங்கை சுபீட்சத்துடனே ஒற்றுமையாக முன்னேற முடிவதாக இருக்கும்.

ஆசிரியருக்குக் கடிதம்

# நன்றிக் கடன் செய்ய ஒரு சந்தர்ப்பம்

சைவத்துக்கும் தமிழுக்கும் உயர்ந்த பணியாற்றி வருபவர் என்ற வகையில் ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலத்தின் உயருறுப்பினர் என்ற விருதினை 1969-ம் ஆண்டில் பெற்றவர் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆவர்.

வித்துவான் அவர்களிடம் கற்றுயர்ந்த அன்பர் பலர் நம்மிடையே உள்ளனர். அவர்கள் தமது குருமணிக்குப் பாராட்டுவிழாச் செய்வதன் மூலம், தங்கள் நன்றிக் கடனைச் செலுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்று இப்போது வந்துள்ளது.

வித்துவான் அவர்களுக்குச் செய்யும் பாராட்டு விழா, நம்மிடையே அருகிவரும் குருபக்தியை வளர்க்க உதவுவதாக!

க. இ. சரவணமுத்து.
குருஉடும் பராய்.

8-ம் கலத் தொடர்ச்சி

உத்தரவிட்டது.

நாடற்றவர்கள் விஷயத்தில் இத்தகைய கொள்கையைக்கடைப்பிடிக்கும் அரசாங்ாம், மற்றவர்கள் விஷயத்தில் அனுமதியின்றி பலாத்காரமாகக் குறியேறியவர்களுக்கு நிலத்தைப் பங்குபோட்டுத் தட்டிலேந்தித்தானமளிக்கும் விந்தையையும் காண்கின்றோம். ஆகையால் அத்துறையில் நமக்குக்கிடைத்துள்ள சிறு சிறு ஆதாயங்களை காப்பாற்றிக்கொள்ளவும் நாம் மிகவும் கஷ்டப்பட்டுப் போராடவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அடிப்படை மனித உரிமைச் சாஸனத்திற்கு மாறாக சட்டவிரோதக் குடியேற்றச் சந்தேக நபர்களைத் தடுப்புக் காவலில் வைக்கவும் தான் இங்கு வசிப்பவர்தான்என்று நிரூபிக்கும் பொறுப்பு அந் நபரையே சாருமென்று திருத்தச் சட்டம் நிறைவேற்றிய பொழுது, மனிதாபிமானத்தோடு அவை கவனிக்கப்படும் என்று நம்பினோம். சட்டவிரோதக்குடியேற்றம் கடுமையாகத் தடுக்கப்படவேண்டும் என்பதில் நாம் பூரணமாக ஒத்துழைக்கத் தயாராகவிருப்பினும் தோட்டத்தொழிலாளர்களை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்வதற்குமுன் தோட்ட தஸ்தாவேஜுகளை பரிசீலனைசெய்து பார்க்கவேண்டுமென்று எடுத்துக்கூற விரும்புகிறோம். அனாமதேயப்புகார் மனுவின் மீது ஆராய்ச்சியின்றி உடன் கைதுசெய்துவிட்டு அதன் பிறகு அத்தாட்சி கோருவதும் அந்த நபருக்காக மற்றவர்கள் அத்தாட்சி தேடிக்கொடுத்தாலும் அவைகளைப் பரிசீலனை செய்து ஆளைவிடுவிக்க அநியாயச் செலவும், காலதாமதமும், கேவலமும் மனோவேதனையும்தான் அதிகமாகின்றன.

## வாசிகசாலை நிறுவுகின்றனர்

சுழிபுரம், புதன்

பண்டத்தரிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட சனசமூக நிலையத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு புதிய வாசிகசாலையையும் பண்டத்தரிப்பு- கீரிமலை வீதியில் நிறுவிவருகின்றனர். விரைவில் திறப்பு விழா நடைபெறவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

என்று பைந்தமிழ்க் கவிஞன் பாரதி பாடியதற்கு இலக்கணமாய் நடமாடும் இலக்கியமாய், கஷ்டஜீவனம் நடத்திக்கொண்டிருக்கும் காலகட்டத்தில்தான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 23-வது மாநாடு கட்டன் ராமானுஜ நகரிலே கூடுகிறது.

தென்கிழக்காசியாவிலேயே மாபெரும் தொழிற்சங்கமாக இன்று வளர்ந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முதல் மாநாடு 1940-ம் ஆண்டு செப்டம்பர் 7-ம், 8-ம் திகதிகளிலே திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் நடைபெற்றபோது அன்று தொழிற்சங்க இயக்கத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக இருந்த திரு. வி. வி. கிரியும், காலஞ்சென்ற திரு. எஸ். சத்தியமூர்த்தியும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அரசியல் தொழிற்சங்கவாதியாக தனது வாழ்வைத் தொடங்கிய திரு. வி. வி. கிரி, முதலாவது மாநாட்டில் கலந்துகொண்டார். இன்று இ. தொ. கா. வின் 23-வது மாநாடு நடைபெறும் வேளையிலே, திரு. வி. வி. கிரி, பாரநாட்டின் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதிப் பதவியில் பெருமையுடன் வீற்றிருக்கிறார்.

திரு. வி. வி. கிரியின் வாழ்வைப்போலவேதான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதன் முதல் மாநாட்டுக்கும்இன்று நடைபெறும் 23-வது மாநாட்டிற்கும் இடையில் எத்தனையோ மாற்றங்களை அடைந்து, எவ்வளவோ முன்னேறி இன்று தனிப்பெரும் இயக்கமாய் சிறப்புடன் பலத்துடன் நிமிர்ந்து நிற்கிறது.

### வி. வி. கிரி கலந்துகொண்டார்

அன்று இலங்கை-இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கிய காங்கிரஸின் மாநாட்டில்கலந்துகொண்ட திருவாளர்கள் சத்தியமூர்த்தியும், வி. வி. கிரியும் 'எரிக்கப்பட்ட சாம்பலிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுந்த 'பீனிக்ஸ்' பறவையின் கதைபோல இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் இனி நிச்சயம் புனர்ஜென்மம் பெற்றுப் பொங்கி எழுவர்' என்றும், 'ஆசியாக் கண்டத்துக்கே அவர்களின் ஸ்தாபனம் ஓர் ஆதர்ஸமாய் அமையும்' என்றும் வாழ்த்திச் சென்றது எவ்வளவு தீர்க்கதரிசனமான வாக்காக அமைந்துவிட்டதென்பதை இன்று நாம் கண்டு தெளிவடைய முடிகிறது.

### 30 ஆண்டுகால வளர்ச்சி

இ.தொ.கா.வின் பொதுச் செயலாளர் திரு. எஸ் செல்

## ஈராண்டு அறிக்கையிலிருந்து சில முக்கிய பகுதிகள் வருமாறு:

(தொகுப்பு: கே. சிவராஜசூரியர்)

### தேசிய அரசாங்கம்

1969-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தோடு நான்காண்டுகள் பூர்த்தியாகும் டட்லி சேனநாயக்கா அவர்களின் தேசிய அரசாங்கம் இன ஒற்றுமைக்காகவும், உணவு உற்பத்திக்காகவும் தீவிரமாக உழைத்து வந்தது. இந்த நான்காண்டுகளில் இந்நாட்டின் இரு பெரும் சமூகங்களான சிங்களவர்களும் தமிழர்களும் பேதம் மறந்து, இணைந்து இருமொழி-பலமதச் சமுதாய ஐக்கியத்தை உருவாக்க முனைந்து விட்டனரென்றே தோன்றியது. இந்த அரசு நிலைகொண்டிருந்த தன்மையாலும் இன ஒற்றுமையை வலியுறுத்தி வந்ததாலும் உணவு உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்தி உழைக்கவும், வெற்றிபெறவும் நல்ல வாய்ப்புக் கிடைத்தது. எங்கும் நாட்டின் பொதுநலனை முன்வைத்து நோக்கும் மனப்பான்மை வளர்ந்தோங்கியது.

### தமிழரசுக்கட்சி வெளியேற்றம்

வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழினப் பிரதிநிதித்துவம் வாய்ந்த சமஷ்டிக்கட்சியோடுள்ள மாவட்ட சபைகள் அமைப்பு பற்றிய உடன்பாட்டை செயலாக்கப் பிரதமர் தவறியதால் அரசாங்கத்திற்குக் கொடுத்த ஆதரவை சமஷ்டிக்கட்சி நிறுத்திக்கொண்டதாலும் இன்னும் சில மாதங்களுக்குள் தேர்தல் நடக்கவேண்டிய நிலையிருப்பதாலும், வகுப்புவாதிகள் தேர்தலில்வெற்றி ஒன்றையே மனதில்கொண்டு இனபேதக் கூப்பாடுபோடக் கிளம்பிவிட்டனர், இதனால் நாட்டின் வருங்கால முன்னேற்றத்திற்கு ஏற்படக்கூடிய தடைகேடுகளைப் பற்றி அவர்கள் சிறிதும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

கூடிக்கொண்டே போகும் வாழ்க்கைச் செலவினத்தை ஈடுகட்ட பொதுத்துறையைப் பொறுத்தவரை அரசாங்கம் துணிந்து சம்பளக் கமிஷனின் இடைக்கால அறிக்கையை அமுலாக்க முற்பட்டதன்மூலம் நல்லபெயர் சம்பாதித்துக்கொண்டது. ஆயினும் எத்தனையோ முன்னேற்றத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்திருந்தபோதிலும் வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்ந்தும் ஒரு பெரும் பிரச்னையாகத்தான் இருக்கிறது. விஸ்வரூபம் எடுத்துவரும் இந்த வேலையற்ற நிலையையும், வேலைக்குறைப்பு நிலையையும் சமாளிக்க அரசாங்கம் கொண்டுள்ள வழிமுறைத் திட்டங்களோ போதுமானவையாயில்லை.

### தோட்டத்தொழிலாளி

தோட்டத் தொழிலாளரைப்பொறுத்தவரை தோட்டத்தொழில் இந்நாட்டின் மொத்த வருமானத்தில் 85 சத வீதத்தையும், வெளிநாட்டுச் செலாவணியீட்டத்தில் பெரும் பங்கையும் தேடிக்கொடுக்கிறதெனினும் ''பொன்முட்டையிடும் வாத்தைக் கொன்ற'' கொள்கையையே இன்னும் இவ்வரசாங்கம் கடைப்பிடித்து வருவதைக் காண மிகவும் வேதனையேற்படுகிறது. இந்தத் தொழிலாளர்களின் சமுதாய பொருளாதார வாழ்க்கை நிலை உயரவும் அதன் மூலம் தேயிலைத் தொழில் மேம்பாடடையவும் அரசாங்கம் இத்தொழில் பற்றி கொண்டுள்ள மாற்றாந்தாய் மனப்பான்மைக் கொள்கை முறையையே மாற்றியமைத்துக்கொள்ளவேண்டியது மிக அவசியமும்அவசரமுமாகும்,

### இலங்கை இந்திய ஒப்பந்தம்

நமது ஸ்தாபனத்தின் அபிப்பிராயங்களையும் கேட்டு அனுசரித்து இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்சட்டம் கொண்டுவரப்பட்டதும் அதற்குப் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் நல்குவதாகநாம் உறுதியளித்தோம். சென்ற இருபதாண்டு காலமாக சுமார் பத்துலட்சம் மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டு அல்லலுறுவதால், நாட்டின் நல்லபெயருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கம் துடைக்கப்படும் என்ற நம்பிக்கையே அதற்குக்காரணம் இந்தச் சட்ட அமுலுக்கு முதல் தடங்கலாக வந்தது நாட்டைவிட்டுப் போவோரைப் பாதிக்கும் ''பீக்ஸ்'' திட்டமாகும். இந்த அநீதியைப் பிரதமரிடம் நமது தலைவர் தொண்டமான் ஆணித்தரமாக எடுத்துரைத்தார் நெற்றிவியர்வை நிலத்தில் விழ, வாழ்நாளெல்லாம் இந் நாட்டுக்கு உழைத்த மககள் சேமித்துள்ள சிறிதுதொகையில் ஒரு பகுதியை இந்தத் திட்டத்தின் மூலம் பறிப்பது கொடுமையிலும் கொடுமையென விளக்கினார், இதனால் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் தடைப்படும் என்றும் விளக்கினார் அதன் பேரில் அரசாங்கம் அநீதியை உணர்ந்து அந்தத் திட்டத்தை நாட்டைவிட்டுப் போகும் இந்தியத் தொழிலாளி சம்பந்தப்பட்டவரை அமுல் நடத்துவதை ஒதுக்கிக் கொண்டது. என்றாலும் ஆச்சரியமாயிருக்கிறது. இம்மாதிரி ஒரேஇனத் தொழிலாளருள் பேதம் காட்டுவது பொருந்தாதென்பதைநமது தலைவர் பிரதமமந்திரியிடம் விளக்கியுள்ளார்.

### பிரஜாஉரிமை மனுக்கள்

இலங்கைப் பிரஜாஉரிமை மனுக்களின் விசாரணை அனுவசியமாகத் தாமதப்படுத்தப்படுவதுபற்றியும் பிரதமரிடம் நமது தலைவர் பிரச்னை எழுப்பினார். இந்திய அரசு ஒப்பந்தப்படி 41,877 பேர்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிந்திருந்தும், இலங்கை அரசு 1969 ஜூலை 31-ம் தேதிவரை 1208 பேருக்கு மட்டுமே பிரஜா உரிமை கொடுத்துள்ளதென்பது மனவேதனையளிக்கக் கூடிய அம்சமாகும்.

இலங்கைப் பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்தவர்கள் விசாரணைக்குக் கொழும்புக்கு அழைக்கப்படுவதால், தொழிலாளர்கள் வேலையிழப்புக்கும், வீண் செலவுக்கும் ஆளாவதோடு ஏமாற்றும் தரகர் பலரிடம் சிக்கித் தவிக்கும் அவலநிலையும் ஏற்பட ஏதுவாகிறது. ஆகையால் அந்தந்தப் பகுதிகளிலுள்ள கச்சேரிகள், ஓய்வுவிடுதிகள் தொழில்காரியாலயங்கள் ஆகிய இடங்களில் விசாரணைக்கு ஏற்பாடு செய்தால் தொழிலாளருக்குள்ள பல சிரமங்களைக் குறைத்ததாகும் என்றும் கேட்டிருக்கிறோம்.

### இந்தியப்பிரஜைகள்

இந்தியப்பிரஜா உரிமைக்கு தாங்களாகவே முன்வந்து கேட்பவர்களுக்கு உரிமை வழங்குவதென்றும் அவர்களுக்கு ஆரம்பத்தில் ஒருவருட காலம் வாசகால அனுமதி கொடுப்பதென்றும், யாதொரு பிரச்னையின்றி அவை வேண்டிய வரை புதுப்பிக்கப்படுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர்களை இந்தியா திரும்பத் தூண்டுவதாயின் மாதவாரியாகவோ, வருஷவாரியாகவோ இலங்கைப் பிரஜைகளாகப் பதியப் படுபவர்களின் விகிதாசாரத்தைப் பொறுத்திருக்கவேண்டும்.

இலங்கைப் பிரஜைகளாகப் பதியக் கொடுத்திருக்கும் மனுக்கள் நந்தைவேகத்தில் கவனிக்கப்படுவதால், அத்தகையோர் அடையும் அல்லல்கள் சொல்லுந்தரமன்று. நாம் எதிர் பார்த்ததற்கு மாறாக நாடற்ற நிலையை அதோடு ஒட்டிய மனிதாபிமானமற்ற கேவலங்களோடு நிரந்தரமாக்கப்படுவது போல் தோன்றுகின்றது. இலங்கைப் பிரஜா உரிமைக்குத் தகுதிபடைத்த இவர்கள் மனுக்கொடுத்திருந்தும் அரசின் அசிரத்தையால் அந்தரத்தில் ஊசலாடுவதோடு, குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதிலும் போக்குவரத்துச் செய்வதிலும் வேலைவாய்ப்புப் பெறுவதிலும் வியாபாரத் தொழில் செய்வதிலும் தொடர்ந்து பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். இவைகளை ஒரு அவசர விஷயமாக நமது தலைவர் பிரதம மந்திரியோடு பேச முனைந்துள்ளார். இவ்வாறு பிரஜாவுரிமைக்கு மனுக்கொடுத்துக் காத்திருப்பவர்களின் உரிமைகள், சலுகைகள் தெளிவாக்கப்பட வேண்டுமென்பதே அவர் கோரிக்கை.

### புனர்வாழ்வுத் திட்டம்

இந்தியப் பிரஜா உரிமை பெறத் தூண்டுமுகமாகஇத்தகையோருக்கு இந்தியவில் புனர் வாழ்வுக்கு என்னென்ன வசதிகள் செய்துதரப்படும் என்று தெளிவுறச் சொல்லப்பட வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். இப்பொழுது சொல்லப்படும் பொது முறையான புனர் வாழ்வுத் திட்டங்கள் மக்களை அவ்வளதூரம் கவர்ச்சி கொள்ளத் தக்கதாயில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களின் தேவைசதிக்கேற்ப எந்த இடத்தில், என்னமாதிரியான புனர் வாழ்வு வசதியளிக்கப் படவிருக்கிறது என்பது பற்றி அவர்கள் போவதற்கு முன்னாலேயே அறிந்து கொள்ளத்தக்க ஏற்பாடு செய்வது அவசியம். வேறு நாடுகளிலிருந்து இந்தியாவந்த அகதிகளை சமூக விரோத சக்திகள் எவ்வாறு அலைக்கழித்து அவர்களின் அற்ப சேமிப்பையும் அபகரித்தனர் என்பதை கேள்விப் படும்பொழுது அத்தகைய அவலநிலைக்கு இவர்களும் ஆளாகக்கூடாதே யென்பதுதான் எம்கவலைக அத்துடன்இலங்கையிலிருந்துஇதுவரைசென்றவர்களுக்கு அளிக்கப்பட்ட புனர் வாழ்வுபற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து மனம் நொந்து அதுபற்றி இந்திய ஹைக்கமிஷனுடன் தொடர்பும் கொண்டுள்ளோம்.

### பாகுபாடுகாட்டல்

நாடற்றவர்கள்பால் காட்டப்பட்ட பாகுபாட்டுத் தன்மை. அவர்களின் நாடற்றநிலை மாறி பதிவுப் பிரஜைகளானபிறகும் தொடர்வதைக்கண்டு மிகவும் வேதனைப்படுகின்றோம். எல்லாப் பிரஜைகளும் சரிசமமாகப் பாவிக்கப்படுவர் என்று அரசாங்கம் அடிக்கடி பிரகடனப்படுத்திய போதிலும் அவர்களின் வாழ்க்கைப் பாதையின் ஒவ்வொரு வழியிலும் பாகுபாடாய் நடத்தப்படுவதையே காண்கின்றனர். அரசாங்க அலுவல்களுக்காகப்போகும் மனுக்களில் வம்சாவழிப் பிரஜையா பதிவுப்பிரஜையா எனக் கேட்கப்படுகிறது

பதிவுப் பிரஜைகளை ஒதுக்கி விட வாய்ப்பளிக்குமுகமாகவே இத்தகைய கேள்விகள்கேட்கப்படுகிறது என்பதுதெளிவு. வியாபாரத் துறையிலும் பதிவுப் பிரஜைகள் அரசாங்க ஆதிக்கத்திலுள்ள சில விற்பனைப் பொருட்களைப் பெறமுடியாமலிருக்கின்றனர். அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள 'லங்கா சலுசல'' வில் இத்தகைய பாகுபாடு காட்டப்படுவதை தலைவர் இராஜாங்க மந்திரியிடம் எடுத்துக்காட்டினார்நாட்டின் பொருளாதாரசமூக முன்னேற்றத்தில் இவர்களும் பங்கு கொண்டு உழைப்பதற்கு அரசு வாயளவில் சமத்துவம் பேசாமல் வாழ்க்கையில ஒவ்வொரு துறையிலும் சமத்துவம் நிலவச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கரீதியில் பாகுபாடுகாட்டப்படும் இன்னொரு விஷயம் என்னவெனில் அரசாங்கக் காணி விநியோகமாகும். உணவு உற்பத்திப் பெருக்கத்தில் இம்மக்களும் பூரணபங்கு கொள்ள எவ்வளவோ ஆவலாயிருந்தும் குறுகிய நோக்கத்தைக கொண்ட கொள்கை அடிப்படையில் அத்துறையில் இம்மக்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். எத்தனையோ ஆண்டுகாலமாக அனுபவத்திலிருந்து வந்த நிலங்களை அவர்கள் நாடற்றவர்களென்ற காரணத்துககா அரசாங்கமே பறிமுதல் செய்த சம்பவங்கள் பலவுண்டு. உடஹேவாஹட்ட பகுதியில் 34 வருடங்களாக நான்கு குழந்தைகளுடன் ஒருசிறு பகுதி நிலத்தில் வாழ்ந்து வந்த ஒரு அபலைவிதவையின் கதை ஒரு பரிதபிககத்தககஉதாரணமாகும். 1917ம் ஆண்டில் அவளுடையகணவனின் பெரியதந்தையால் அச்சிறு துண்டுநிலத்தில் கட்டப்பட்ட பாபர் சலூனைப் பின் 1963வரை அவளுடைய கணவன் பொறுப்பேற்றிருந்துஇறந்து விட்டார். இந்தவிதவைக்கும் பிள்ளைகளுக்கும் அந்த வருமானம் மட்டுமே ங்களுடைய ஜீவனமாகும். அவள் இன்னும் இந்நாட்டுப் பிரஜையாகவில்லை என்ற காரணங்காட்டி மனிதாபிமான மற்ற முறையில் இடத்தைககாலி செய்யுமாறு அரசாங்கம்

(1-ம் கலம் பார்க்க)

0 0 0

யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள

[illegible] தேவியைப் பாகம் வைத்தார் திருப்பயற்றூரரே.

— அப்பர் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org